Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 07 (10.04.2003) வியாழக்கிழமை இதழ் :189

திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
பலிக்களம்
(திருப்பாடுகளின் காட்சி)
இன்று மாலை ஆரம்பமாகின்றது
10,11,12,13 ஏப்ரல் 2003
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். -திருமறைக்கலாமன்றம்

# கல்லுண்டாயில் படை முகாம் அமைக்க இராணுவம் மறுப்பு

## விண்ணாணம் விநாசியர்



அப்ப குடிமனை ஒவ்வொன்றுக்கும் குட்டிப் படைமுகாம்தான் திட்டமோ..?

## உயர்மட்ட விஜயத்தில் முடிவு எட்டப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில், இராணுவ முகாம் அமைக்கப்படுவதற்குப் பதிலாக கல்லுண்டாய் வெளியில் அதனை அமைக்க யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மறுப்புத் தெரிவித்துள்ளார்.**

யாழ்.நகரப்பகுதியில் புதிய இராணுவ முகாம் அமைக்கப்படுவதற்கான இடத்தைத் தெரிவுசெய்வது தொடர்பாக ஆராய, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலர் கரலியத்த தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் நேற்று வருவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் வருகைதரவில்லை.

நேற்று விமானம் மூலம் பலாலி வந்திறங்கிய குழுவினர், பலாலிப் படைத்தளத்தில் யாழ். பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் சந்திப்பு ஒன்றினை நடாத்தினர். பின்னர் 512

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பொது அமைப்புகளுக்கு அழைப்பில்லை

யாழ். மாநகர எல்லைக்குள் இராணுவமுகாம் அமைக்கும் விவகாரம் தொடர்பாக, நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பில் கலந்துகொள்ள, யாழ் மாவட்ட பொது அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் - மக்களின் பிரதிநிதிகளை அழைத்துக் கருத்தறியாது, தன்னிச்சையான முடிவுகள் எடுக்கப்பட்டமை தமக்கு வேதனை தருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கல்லுண்டாய் வெளியில் இராணுவத்தரப்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்.

## தொண்டர் ஆசிரியர் விவகாரம்; கூட்டமைப்பு பிரதமரை சந்திக்கும்

தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக, தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்றுகாலை பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேசவுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக ஓர் உறுதியான முடிவு இச்சந்திப்பில் எட்டப்படும் என, கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய சந்திப்பில் - கூட்டமைப்பு எம்.பிக்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார், விநாயகமூர்த்தி, ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

## சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகள் தமிழ்ச்செல்வனை இன்று சந்திப்பர்!

(யாழ்ப்பாணம்)

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யூ.என்.டி.பி. என்பவற்றின் கொழும்பு அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளருடன் இன்று கிளிநொச்சியில் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளனர்.

உலகவங்கியின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரால்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜோன் கூனி, யூ.என்.டி.பியின் இலங்கைக்கான உயரதிகாரி ஆகியோர், இன்று முற்பகல் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளனர்.

## கடற்பிரதேச மோதல் தவிர்ப்பு; புலிகளுடன் ரெலவ்சன் சந்திப்பு!

### தமிழ்ச்செல்வன், சூசை, தீபன் பங்கேற்றனர்



(கிளிநொச்சி)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ரெலவ்சனை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோர் நேற்றுச் சந்தித்து, கடற்பிரதேசத்தில் மோதல்களை தவிர்ப்பது தொடர்பாகப் பேச்சு நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கிற்கு வந்திறங்கிய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தலைமையிலான குழுவினரை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் கைலாகு கொடுத்து வரவேற்று, அரசியற்துறை நடுவப் பணியகத்திற்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் காலை 10.30 மணியளவில் சந்திப்புக்கள் ஆரம்பமாகின. இச்சந்திப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் பெக்கா பிகர்வர்சன், எரிக் பீற்றர்சன், ரொகில்சன், லுண்டின், போல் எரிக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பு நண்பகல் ஒரு மணியளவில் நிறைவடைந்தது. இதில் பேசப்பட்ட விடயங்களை விரிவாகத் தெரிவிக்க கண்காணிப்புக்குழுத் தலைவர் மறுத்துவிட்டார். மதியம் போர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடலிலும் கட்டுப்பாட்டுப் பிரதேசம்; தொடர்ந்து பேண விரும்புகிறோம்!

### தமிழ்ச்செல்வன் உறுதிபடத் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தரையைப் போன்றே கடலிலும் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருப்பதை விரும்புகிறோம். போர்க்காலங்களில் எமது கட்டுப்பாட்டிலிருந்த கடற்பகுதியினுள் அரச படைகள் நுழையமுடியாத நிலை இருந்தது. ஆனால், சமாதான காலத்தில் எங்கள் கட்டுப்பாட்டுக் கடற்பகுதியினுள் கடற்படை ஊடுருவி வருகின்றது என, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று, கிளிநொச்சியில் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனுடனான சந்திப்பையடுத்து, செய்தியாளர்களிடையே பேசும்போதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவராக ரெலவ்சன் பொறுப்பேற்றபின், இரண்டாவது தடவையாக எம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்போக்குவரத்தில் புதிய பிரேரணைகள்!

### விபரம் தெரிவிக்க ரெலவ்சன் மறுப்பு

போர் நிறுத்தக் காலப்பகுதியிலும், எதிர்காலத்திலும் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு எவ்வாறு சிறப்பாகச் செயற்பட முடியும் என்பது குறித்து, விடுதலைப் புலிகளுடன் தாம் நேற்று கலந்துரையாடியிருப்பதாக கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் நேற்று கிளிநொச்சியில் செய்தியாளரிடையே தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் பின்னர் அவர் செய்தியாளர்களிடையே பேசுகையில் -

தமிழ்ச்செல்வனுடன், புலிகளின் கடற்படைத் தளபதி சூசை, வடமுனைத் தளபதி தீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் போக்குவரத்துத் தொடர்பாக நாம் பேசினோம். இவ்விடயம் தொடர்பாக மேலும் இம்மாதம் 20 ஆம் திகதி மட்டக்களப்பிலும், 21 ஆம் திகதி திருகோணமலையிலும் நாம் புலிக

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி - 'பலிக்களம்'

மனிதகுலத்தின் மீட்புக்காக மண்ணில் உதிர்ந்த விண்ணக மலரின் வரலாற்றுச் சுவடுகளை - இருள் மூடிய உலகை தன் சிலுவைச் சாவினால் ஒளிரவைத்த இறை மைந்தனின் அர்ப்பணிப்பை - இன்று முதல் நான்கு நாட்களுக்கு திருமறைக் கலாமன்றம், பிரதான வீதியில் உள்ள தனது மன்ற அரங்கில் இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் கூட்டிணைவில் "பலிக்களம்" என்ற பெயரில் மேடையேற்றுகின்றது.

மனிதர்களைக்கொண்டு திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றும் முறை எப்போது இலங்கையில் அறிமுகமாகியது என்பது இன்று வரை ஆய்வுக்குரியதாகவே உள்ளது. எனினும், சிங்கள மக்கள் மத்தியில் தான் ஆரம்பத்தில் இது அறிமுகமாகியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இதனை முதன் முதலாக அறிமுகம் செய்தவர் அருட்திரு லோங் அடிகளாவார். 1952 இல் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஆங்கிலத்தில் இது மேடையேற்றப்பட்டது. பின்னர் 1954 இலும் மேடையேற்றப்பட்டது. பின்னர் இப்பிரதி அருட்திரு மரியாம்பிள்ளை அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, அப்போது நாடக ஆசிரியர்களாக இருந்த எவ்.ஜே.ஆம்ஸ்ரோங், கனகரெட்டினம் ஆகியோரால் நெறியாள்கை செய்யப்பட்டு, 1956, 1959 ஆம் ஆண்டுகளில் யாழ்.புனித பத்திரிசிரியார் கல்லூரி மைதானத்திலேயே மேடையேற்றப்பட்டது. பின்னர் இதன் பாணியிலேயே வேறு சில இடங்களிலும் மேடையேற்றப்பட்டது.

ஆனால், இப்பிரதியை முதன் முதலாக தமிழிலேயே எமது மொழிக்கான தனித்துவத்துடன் எழுதி நெறியாள்கை செய்தவர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் ஆவார். 1962 ஆம் ஆண்டுமுதல் அவர் இந்த அரும்பணியினை மேற்கொண்டு வருகின்றார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட திருமறைக்கலாமன்றம், ஆண்டு தோறும் இப்பணியினை தொடர்ச்சியாக முன்னெடுத்து, இலங்கையில் மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றிலும் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றி வருகின்றது.


## மலிவு விற்பனை

**20% முதல் 50% வரை**

**புதுக்கணக்குப் போடவிருப்பதால்**

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-753)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


ஓம் ஸ்ரீ காமாக்ஷி துணை

## 16 ஆவது நாள் நினைவு நிகழ்வு



| மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 29 - 09 - 1989 | 26 - 03 - 2003 |

### செல்வி ஸ்ரீ.குவலயா

(யாழ். வேம்படி மகளிர் மாணவி - தரம் 9 'C')

உள்ளம் உனை நினைந்து ஏங்கித் தவிக்கிறது!
கள்ளம் அறியாக் குவலயாவே! எங்குற்றாய்?
*உன் ஆத்மா சாந்தி அடைவதாக.*

11.04.2003 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

☛ ஆறாத சோகத்தினால் அழைப்பிதழ் வழங்கமுடியாத நிலையிலிருக்கின்றோம். அன்புள்ளங்கள் வருகைதந்து மதிய போசனத்தில் பங்கேற்கவும்.

- சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் (தந்தை)
திருமதி ஸ்ரீ.சத்தியபாமா (தாய்)
செல்வன் ஸ்ரீ.நிதர்சன் (அண்ணா)
திரு. பேரானந்தம் (மாமா)
திருமதி உமாராணி (மாமி - ஆசிரியை)

*1029/3, மதவடி ஒழுங்கை,*
*காங்கேசன்துறை வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (சி-784)


**திறைஞ்சனல்** சங்கானை

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

**Jurrasic Park - 3**

(பாடசாலை மாணவர் பார்த்து மகிழக்கூடியது)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**BEST OF THE BEST**

14.04.2003 முதல் **ரமணா** (சி-731)

**ராஜா** யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த

**ரோஜாக்கூட்டம்**

10.30, 2.30, 6.30

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்

புதுவருட வெளியீடு

சரத்குமார், சிம்ரன், றோஜா

**அரசு** (சி-732)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின்

## கலையமுது

**சஞ்சிகை வெளியீட்டு விழா**

இன்று (10.04.2003) மாலை 3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(308) கலைப்பீட மாணவர் ஒன்றியம்.

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்



பெயர் : சு.டிலக்ஸனா
முகவரி: தோணிக்கல், வவுனியா.

### ஆறாவது அகவையில்



பெயர் : சி.வினித்தா
முகவரி: கைதடி தெற்கு, கைதடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்


## நமது ஈழநாடு நடாத்தும்

### க.பொ.த (உயர்தரம்) 2003

வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு

அனுசரணை ~

கொமர்ஷல் வங்கி - உங்கள் நலமே எங்கள் நோக்கம் - Best Bank in Srilanka
Institute of Informatics Studies
இலங்கை வங்கி - தேசத்தின் வங்கியாளர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
Elephant house - Necto

ஆசிரியர் குழாம்

வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்

காலம்:- 11.04.2003
நேரம்:- காலை 8.மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.


## 5 ஆம் ஆண்டு நினைவுநாள்



| மழலையாய் | மாவீரனாய் |
|---|---|
| 01 - 10 - 1976 | 05 - 04 - 1998 |

### கப்டன் அன்பழகன்

(சிவசம்பு சிவகுமார்)

பச்சிலைப்பள்ளி முகாம் தகர்க்க பாய்ந்த புலிவீரனே
பார் புகழ பெருமை கொண்டோம் - உனை
பார்க்காமல் நாம் பதறித் துடிக்கின்றோம்
பாசமகனே உன் கனவு பலிக்குமடா

இவரின் நினைவாக 10.04.2003 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் போராளிகள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவர் நினைவில்,
குடும்பத்தினர்,
போராளிகள்.

*மாசியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.* (சி-781)

## பொ.ஐ.மு.வுக்குள் பிளவுகள் தீவிரம்:
# வட-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி தனித்துப் போட்டி!

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் பிளவுகள் அதிகரித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட-கிழக்கு உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டால், தாம் தனித்துப் போட்டியிடவுள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இடம்பெற்றுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது.

வட-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் தாம் சிவப்பு நட்சத்திர சின்னத்திலேயே போட்டியிடவுள்ளதாகக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.யு.குணசேகர தெரிவித்தார். இதற்குக் கட்சியின் உயர்பீடம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் ஊடாக உள்ளூராட்சி சபைகளுக்குப் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல்களைத் தயாரிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அங்கமாகவுள்ள கம்யூனிஸ்ட் கட்சி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளமையானது, கூட்டணிக்குள் பெரும் பிளவு ஏற்படுவதற்கான அறிகுறி என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

# பிரதமரின் ஆலோசகர்களால் சர்வதேச நிதியுதவிகள் அபகரிப்பு!
## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)
உலகவங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து இலங்கைக்குக் கிடைக்கும் நிதியுதவிகள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டு ஆலோசகர்களால் அபகரிக்கப்படுவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு - ரொம் றொபின்சன், ரொம் மக்சல், ஜிம் றொபேட்சன், ஜோன் ஏல்ட் ஆகிய நான்கு வெளிநாட்டு ஆலோசகர்கள் இருக்கின்றார்கள்.

இவர்கள் உலகவங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியம் ஆகியவற்றில் பணியாற்றியவர்கள். இவர்களில் குறிப்பிட்ட சிலர் ஊழல்களில் ஈடுபட்டதாக, அந்த சர்வதேச நிதிநிறுவனங்களிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்.

சர்வதேச நிதிநிறுவனங்களில் ஊழல் செய்தவர்கள் இன்று இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்களாக மாறியிருப்பதாகவும் மங்கள சமரவீர மேலும் குற்றஞ்சாட்டினார்.

# பேச்சுக்கள் குறித்த நிலவரங்களை மகா சங்கத்தினருக்கு தெரியப்படுத்துங்கள்
## பிரதமர் ரணில் பீரிசுக்கு உத்தரவு

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அவ்வப்போது மகாசங்கத்தினருக்கு விளக்கமளிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இத்தகவலை நேற்று முன்தினம் அனுராதபுரவில் பிக்குகளின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டார்.

சமாதான முயற்சிகளில் அனைத்துத் தரப்பினரின் ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியமாகும். குறிப்பாக, பௌத்த பிக்குகள் இந்த முயற்சிக்குப் பூரண ஆதரவு வழங்க வேண்டும். இதற்காகவே சமாதான முயற்சிகள் குறித்து மகாசங்கதினருக்கு அவ்வப்போது விளக்கமளிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருப்பதாகவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# சிறுவர் நலன் பற்றி ஆராயும் இரண்டு நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
சிறுவர் நலன்கள் குறித்து ஆராயும் இரண்டு நாள் கருத்தரங்கு இன்று கிளிநொச்சியில் ஆரம்பமாகவுள்ளது. யுனிசெப் ஆதரவுடன் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில், சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சிறுவர் நலன்காப்புத் திட்டங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் அரசாங்க மற்றும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறுவர் நலன் தொடர்பாக நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறை குறித்துப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன், யுனிசெப்பின் உள்ளூர் பிரதிநிதி பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

# யுத்த நிறுத்த மீறல் குறித்து உடன் அறிவிக்க வேண்டும்
## முப்படைத் தளபதிகளுக்கு ஒஸ்ரின் பணிப்பு



வட-கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் எந்தவொரு யுத்தநிறுத்த மீறல் குறித்தும் தனக்கோ அல்லது இராணுவப் பேச்சாளருக்கோ உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும் என்று - முப்படைகளின் தளபதிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணானடோ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வட-கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். நாட்டிலுள்ள பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு மக்களுக்கு இருக்கவேண்டும்.

படையினர் அரசாங்கத்துக்கு அறிவிக்கும் எந்த அறிக்கையும் மக்களைச் சென்றடைய வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தமது உத்தரவில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# வவுனியா - முல்லைத்தீவு மாவட்டங்களில் அபிவிருத்திப் பணிகள் மீண்டும் ஆரம்பம்

வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி முதலாவதாக 455 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஐந்து வருடங்கள் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத்திட்டப் பணிகளுக்கு உலகவங்கி நிதியுதவிகளை வழங்கவுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் - கல்வி, நீர்ப்பாசன, விவசாய, சுகாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கே இந்நிதியுதவி பயன்படுத்தப்படவுள்ளது.

### புலமைப் பரிசில் கருத்தரங்கு

மேல் மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு இன்று கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

# அமெரிக்க, பிரித்தானிய உற்பத்திகளை வாங்க மறுக்கும் இயக்கம் ஆரம்பம்

(கொழும்பு)
இலங்கையர்கள், அமெரிக்க மற்றும் பிரித்தானியத் தயாரிப்புப் பொருட்களை வாங்கக்கூடாது என பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும், சுதந்திரக் கட்சி தொழிற்சங்கத் தலைவருமான அலவி மௌலானா கேட்டுள்ளார்.

ஈராக் மீதான போரை இவ்விரு நாடுகளும் ஆரம்பித்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அலவி மௌலானா இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்வானையில் அமெரிக்க, பிரித்தானியப் பொருட்களை வாங்க மறுக்கும் இயக்கத்தை அலவி மௌலானா ஆரம்பித்து வைத்தார். இந்த இரு நாடுகளின் தயாரிப்புக்களான சொக்லேற், குளிர்பானங்களை வாங்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்க டொலரைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், யூரோ நாணயங்களைப் பயன்படுத்துமாறும் அலவி மௌலானா கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச ரீதியில் பல நாடுகளில் அமெரிக்க பிரித்தானியப் பொருட்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க, பிரித்தானிய உற்பத்திப் பொருட்களை வாங்க மறுக்கும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால்- இலங்கையின் பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படும் நிலை உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டணி! ஒப்பந்தம் அடுத்தமாதம் கைச்சாத்து
## விமல் வீரவன்ச கூறுகிறார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி குறித்த இறுதி முடிவு இம்மாத இறுதிக்குள் எடுக்கப்படும் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பாகப் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும், இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டம் தவிர்ந்த ஏனைய பல விவகாரங்களில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இணக்கம் காணப்படாதுள்ள விடயங்கள் குறித்து இம்மாத இறுதிக்குள் இணக்கப்பாடு எட்டப்பட்டு விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச செய்தியாளர் மத்தியில் பேசியபோது, அடுத்த மாதம் சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்று தெரிவித்தார்.

### சந்திரிகா பங்களாதேஷ் செல்கிறார்

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டு நாள் விஜயமாக பங்களாதேஷ் செல்லவுள்ளார். எதிர்வரும் 19 ஆம் திகதி இவர் பங்களாதேஷுக்குச் செல்வார்.

அடுத்துவரும் வாரங்களில் மேலும் சில நாடுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிகா நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இராணுவத்தினர் உண்ணாவிரதம்

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 69 இராணுவச் சிப்பாய்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி முதல் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தின் ஆயுத மனித வலுப்பிரிவில் 16 வருடங்களுக்கு முன்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட இந்த 69 இராணுவச் சிப்பாய்களும் பயிற்சியின் பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களைப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் - ஒருவருக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடு கொடுத்து சேவையிலிருந்து நீக்கியிருந்தது.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் வழங்க வேண்டும் எனவும், தமக்கு வழங்கப்பட்ட நஷ்டஈட்டு நிதி போதாது என்று கோரியுமே 69 படையினரும் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.




யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையின் வெளிக்கள வேலைத்திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட- பண்டத்தரிப்பு பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்க அங்கத்தவர்களுக்கான இலவச சட்டபூர்வ திருமணப்பதிவு வைபவத்தில் யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை பேராசிரியர் என்.சிவராஜா திருமண அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியை சட்டபூர்வ திருமணம் செய்த

# சட்டவிரோத மின்பாவனையை பிடிப்பதற்குப் புதிதாக வாகனம்

## மின்சாரசபை வழங்கியது

சட்டவிரோத மின்சாரம் பெறுவோரைப் பிடிப்பதற்குச் சிறிய வாகனம் ஒன்று மின்சார சபையினால் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், சட்டவிரோத மின்பாவனையாளரை இலகுவாகப் பிடிக்க முடியும் என மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சட்டவிரோத மின்சாரம் எடுப்போரைப் பிடிப்பதற்குப் பெரிய கனரக வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தது. இதனைக் கொண்டு இரவுவேளைகளில் செல்லும்போது, அவர்கள் விழிப்படைகின்றனர். இதனால், பிடிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டிருந்தன.

தற்போது சிறிய வாகனம் ஒன்றினைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனைச் சுழற்சிமுறையில் ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள சட்டவிரோத மின்பாவனையாளர்களைப் பிடித்து, அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும், இந்த நடவடிக்கை உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (23)

# சிறிய ஐஸ் தொழிற்சாலை பருத்தித்துறையில் அமைக்கப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரில் விரைவில் சிறிய ஐஸ் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான உதவிகளை வழங்குவதற்கு யு.என்.டி.பி முன்வந்துள்ளது.

வடமராட்சி வடக்குக் கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக இந்த ஐஸ் தொழிற்சாலை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றது.

ஆழ்கடல் மீன்பிடித்தொழிலில் மீனவர்கள் ஈடுபட்டுவருவதால், தம்மால் பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு வசதியாக ஐஸ் தொழிற்சாலையை அமைத்துத்தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து - இந்த நிறுவனம் இதனை அமைக்க முன்வந்துள்ளது.

அதேவேளை, கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது சேதமடைந்து தற்போது இயங்கமுடியாத நிலையில், கற்கோவளத்தில் பாரிய ஐஸ் தொழிற்சாலை ஒன்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (23)

## புதுவருட வியாபாரிகளால் நெரிசல்

(யாழ்ப்பாணம்)

புதுவருடதினம் அண்மித்து வருவதையடுத்து யாழ்.நகர்ப்பகுதியில் நடைபாதை வியாபாரிகளின் தொகை அதிகரித்துள்ளது.

இதனால், முனீஸ்வரன் வீதிப்பகுதியில் வாகனங்கள் செல்வது தடைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அனுமதி மறுக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் நடைபாதை வியாபாரிகள் விற்பனையில் ஈடுபடுகின்றனர். இதனால், நகர வீதிகளில் பிரயாணம் செய்வது பெரும் சிரமமாக இருக்கின்றது. (சு)

# பாடசாலைகளில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தனித்தனிக் கடமைப்பட்டியல்

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாராப் பணியாளர்களுக்கான கடமை நேரப்பட்டியல் தொடர்பான விபரங்களைப் பாடசாலைக் கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளில் கடமை புரிவதற்கென நியமிக்கப்பட்டுள்ள கல்விசாரா கனிஷ்ட ஊழியர்களால் செய்யப்படவேண்டிய பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாமையினால், பாடசாலை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் அசுத்த நிலையில் இருப்பதாகவும், ஏனைய கல்விசாராப் பணியாளர்கள் தமது கடமைகளை முறையாக மேற்கொள்வதில்லையெனவும், பாடசாலைக் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதுதவிர, சிலவேளைகளில் பாடசாலைச் சிற்றூழியர்களின் கடமைக்குப் புறம்பான பணிகளையும் மேற்கொள்ளுமாறு சில அதிபர்களினால் - சிற்றூழியர்கள் பணிக்கப்படுவதாகவும், ஊழியர் தொழிற்சங்கங்கள் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளன.

இதையடுத்தே, கல்விசாரா சிற்றூழியர்களின் கடமைகள் தனித்தனியாக வரையறுக்கப்பட்டு, பட்டியல்படுத்தி பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பாடசாலைக் கல்வியமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளது.

பாடசாலை எழுதுவினைஞர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தட்டெழுத்தாளர்கள், புள்ளிவிபரத் தகவல் பதிவாளர்கள், நூலகர், நூலகப் பணியாளர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள், ஆய்வுகூட ஊழியர்கள், பாடசாலைத் தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், காவலாளர்கள் ஆகியோருக்கான கடமைப் பட்டியல்களே வெளியிடப்பட்டுள்ளன. (100)

# வலிகாமம் வலய மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில்- வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் றெஜீனா இருதயநாதன் கலந்து கொண்டார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகள் வருமாறு -

ஆண்கள் பிரிவில் - முதலாம் இடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலமும், இரண்டாம் இடத்தை சங்கானை சிவப்பிரகாசா மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை இணுவில் இந்துக் கல்லூரியும் பெற்றன.

பெண்கள் பிரிவில் - முதலாம் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரியும், இரண்டாம் இடத்தை நவாலி மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும், சங்கானை சிவப்பிரகாசா மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் யாழ்.மாவட்ட மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (118)

## தாக்குதலில் காயம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் ஏற்பட்ட - கைகலப்பு ஒன்றில் தாக்குதலுக்குள்ளானவர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் - அதேயிடத்தைச் சேர்ந்த இராமன் தர்மலிங்கம் (வயது 61) என்பவரே தாக்குதலுக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் (சு)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் விவசாயப் போதனாசிரியர் இல்லை

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்கு விவசாய போதனாசிரியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமெனக்கோரி, சண்டிலிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளம் - விவசாயத் திணைக்களத்திடம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

தற்போது வலி.வடக்கு - கீரிமலை கமநலசேவை கேந்திரநிலையப் பிரிவுக்கான விவசாயப் போதனாசிரியரே சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குமான விவசாய போதனாசிரியாரகவும் கடமையாற்றி வருகின்றார்.

மேற்படி போதனாசிரியர் இரு பிரதேசங்களுக்குமாகச் சேவையாற்றி வருவதால், விவசாயிகளுக்கான சேவைகளை முற்றுமுழுதாகப் பெறமுடியாதநிலை நிலவுகின்றது.

எனவே, விரைவில் இப்பிர தேச செயலர் பிரிவுக்கென விவசாயப் போதனாசிரியர் ஒருவரை நியமனம் செய்து தருமாறு அவர்கள் அக்கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (100)

# எங்கே போகிறோம்...?

நேசன்

## சினி யாத்ரா - சில அனுபவங்களும் ஆதங்கங்களும்

படைப்புக்களில் கலைத்துவம் பற்றிச் சிந்திக்கும்போது, இன்று பெரும்பாலான மக்களை ஈர்க்கின்ற துறையாக விளங்குகின்ற திரைப்படத்துறையைப் புறந்தள்ளிவிடமுடியாது. அண்மையில், கடந்த 26.03.03 தொடக்கம் 30.03.03 வரை யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் திரையிடப்பட்ட சினி யாத்ரா திரைப்படங்கள் பற்றிய அனுபவம் - நல்ல அனுபவத்தை வழங்குதல் என்பதற்கும் மேலாகச் சில அடிப்படைத் தெளிவுகளைப் பலருக்கும் வழங்கியிருக்கின்றன.

இந்த இலங்கைத் திரைப்படவிழா - சினிமா என்கின்ற சிறந்த ஊடகத்தின் சரியான உபயோகமுறை பற்றிய தெளிவினைத் தந்துள்ளது. படம் பார்த்தல் என்பது வெறும் பொழுதுபோக்கு என்ற கருத்தை உடைப்பனவாகவும், மனித மனத்தைத் தொட்டு, அசைத்துச் சிந்திக்க வைக்கும் பணியைச் சரியான முறையில் உருவாக்கப்படும் ஒரு திரைப்படம் செய்யமுடியும் என்பதை உணர்த்துவனவாகவும் இத்திரைப்படங்கள் விளங்கின.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புக்கள் அலகு, வட -கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, இலங்கை ஆசியத் திரைப்படமையம் ஆகியவற்றுடன் சேர்ந்து திரிகோண கலை மையத்தினர் இந்த இலங்கைத் திரைப்படவிழாவினை ஒழுங்கு செய்திருந்தனர். இவர்களின் பணியினைத் திட்டமிட்டபடி முன்னெடுக்க உதவியாக விளங்கிய பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகினைச் சேர்ந்த சிவச்சந்திரன், திரைப்பட ஆர்வலரும், நீண்டகாலமாக நல்ல திரைப்படங்கள் மக்களைச் சென்றடையவேண்டும் என்ற நன்நோக்கத்தோடு செயலாற்றி வருகின்ற படைப்பாளியாகிய அ.யேசுராசா ஆகியோருக்கு இந்த விழாவிற் கலந்துகொண்ட அனைவரும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தத் திரைப்படங்கள் மூலம் தெளிவான சில உண்மைகளை முதலிற் சொல்லியாக வேண்டும். நமது மக்களைப் பொறுத்த வரையில் 'படம் பார்த்தல் என்பது ஒரு சந்தோஷமான பொழுதுபோக்குக் கிரியை' யாகவே இருந்து வருகிறது. சிறிதுநேரம் சந்தோஷித்து இருக்க உதவும் ஒரு காரியத்தைச் செய்யவே திரைப்படம் உதவும் என்ற கருத்துத்தான் இன்றும் பெரும்பாலான மக்களிடமிருந்து வருகின்றது. - இது மிகவும் தவாறன கருத்து எனவும் - மகிழ்ந்திருக்க வைத்தல் என்பதைத் தாண்டி, ஒரு நல்ல கலைப்படைப்பு எப்படியெல்லாம் நல்ல தாக்கங்களை ஏற்படுத்தமுடியும் என்பதற்கு இந்தத் திரைப்படங்கள் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தன.

முதலில் ஒரு கட்புலக் கலைச்சாதனம் என்ற வகையிலேயே நாம் சினிமாவை அணுகவேண்டும். அதாவது, காட்சிப்படுத்தலினூடாக ஒரு கதையை, ஒரு கருத்தை உணர்த்தவே திரைப்படம் உதவவேண்டும். வசனம் பேசி, முழக்கம் செய்து காட்டுவதற்குக் கேட்டல் மூலமான அனுபவத்தை வழங்கக்கூடிய வேறு மார்க்கங்கள் உண்டு. முதன்முதலில் சினிமா ஒரு 'பேசாச் சித்திரமாகவே' விளங்கியது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பேசும் படங்கள் தோன்றி வளர்ந்து, இப்போது பேச்சே முன்னிலைப் படுத்தப்பட்டுப்போன ஒன்றாக விளங்குகின்றன. நமது (தென்னிந்திய) சினிமாக்கள் புகைப்படக் கருவிகளுக்குத்தான் மிகமுக்கியமான பங்கு இருக்கின்றது. நுட்பமான காட்சிப்படுத்தலினூடாகப் பார்வையாளனுக்குச் சில செய்திகளைச் சூட்சுமமாக உணர்த்திவிடுவது, ஒரு அனுபவத்தை ஏற்படுத்துவது சினிமாவின் நோக்கமாக இருக்கவேண்டும். மேற்படி திரைப்படவிழாவின் திரைப்படங்கள் இந்தவகையிலேயே தமது பணியைச் செய்தன. இதனாற்தான் அவை சர்வதேசக் கவனிப்புக்கு இலக்காகி - விருதுபெறும் கணிப்புக்கு உள்ளாகவும் முடிந்தது.

பிரசன்ன விதானகே என்னும் இளைய இயக்குநர் ஒருவரால் உருவாக்கப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்ட புரசந்த கலுவற (பூரணையில் ஒரு மரணம்) என்னும் திரைப்படம் விருதுகள் பெற்றது. கடந்தகால அரசினாற் திரையிடப்படக் கூடாதெனத் தடைசெய்யப்பட்டது. பின் மேற்படி இயக்குநர் வழக்குத் தொடர்ந்து வெற்றிபெற்றதால், திரையிடப்பட்டுப் பலரையும் தொட்டது. பலராலும் சிறப்பித்துப் பேசப்படுவது.

இந்தத் திரைப்படத்தில் பேச்சைவிட மௌனமே பல சேதிகளைச் சொல்லியது. இதில் வந்த பல காட்சிகள் வசனத்தினூடாகவல்ல - பேசாமையூடாக - காட்சியினூடாக மட்டுமே கதையும் சொல்லி அது பலத்தையும் ஏற்படுத்தின. இதுபோலவே தீர்த்தயாத்ரா, பவதுக்க, பவகர்ம, சந்தகின்னர போன்ற திரைப்படங்களும் பேசாது பேசிப்போன பல விஷயங்கள் இப்போதும் மனதில் நிழலாடுகின்றன. புகழுக்குரிய அந்தத் திரைப்படங்களை வழங்கிய படைப்பாளிகள், கலைஞர்களை வாழ்த்துவோம். அதேபோதில் நாம் கண்டு களித்துக் கொண்டிருக்கின்ற - காதுக்கினிய கானங்களும், மயிர்க்கூச்செறிய வைக்கும் சண்டைக் காட்சிகளும், கிளுகிளுப்பூட்டும் இனிய காதற் காட்சிகளும் கொண்ட தென்னிந்தியத் திரைப்படைப்புக்கள் பற்றி இனியாவது நாம் கொஞ்சம் கடுமையாக, புத்திசாலித்தனத்தோடு, முட்டாள்தனமான ரசனைக் கூட்டுக்களிலிருந்து எம்மை விடுவித்துக் கொண்டவர்களாக சிந்திக்கத் தொடங்க வேண்டும். பார்வையாளனை ஒரு 'அறிவிலி'யாகப் பாவித்து, பாப்பாக் கதை சொல்லிப் பணம் சம்பாதிக்கும் ஒரு முதலைக் கூட்டத்துக்குத் தென்னிந்திய 'அப்பாவிகள' பலியாகிக் கொண்டிருப்பது ஒரு பெரியசோகம். அதைவிடப் பெரிய, கொடிய சோகம் என்னவெனில் - அதே லாகிரி வஸ்து நம்மையும் பிடித்தாட்டிக் கொண்டிருப்பதுதான்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் - நாம் ஓகோவென்று பாராட்டிக் கொண்டிருந்த, பாராட்டிக் கொண்டிருக்கின்ற எத்தனை படங்கள் நம்மை முட்டாளாக்கியுள்ளன. கதாநாயகன் என்கின்ற ஒரு மந்திர ஜாலக்காரன் - நாற்பது, ஐம்பது பேரையும் வெறுங்கையோடு (அவர்கள் கம்பி, பொல்லு, துப்பாக்கி வைத்துள்ள போதும்) அடித்து நொருக்கி விடுவதையும், பறந்து பறந்து தாக்கி மீளுவதும் எத்தனை காலமாக நமது ரசனைக்கு விருந்தாகி வருகிறது! வாய்பிளந்தபடி அதையெல்லாம் ரசித்துவிட்டுப் போதாக்குறைக்கு அந்த ஸ்டைலில் முடியும் வெட்டிக்கொள்ளும் அறியாமை எப்போது நீங்கும்? நாம் நல்ல படங்கள் என்று சொல்லுகின்ற படைப்புக்கள்கூட எத்தனை முட்டாள்தனமான படைப்புகளாய், அர்த்தமற்ற வகையில் நம்மை 'அழ'வும் வைத்துவிடுகின்றன. யதார்த்தத்தில் அவையெல்லாம் சாத்தியமாகுமா என்று நாம் சிந்தித்ததுண்டா? திரைப்படமொன்றில் வருகின்ற ஒரு சம்பவம் தொடர்பான காட்சியைப்போல நமது அன்றாட வாழ்வில் நிகழமுடியுமா? முடியாத ஒன்றைக் காட்சியாக்கி நம்மைக்கவர்ந்து வருகிறார்க ளென்றால், அந்த இடத்தில் நாம் வெறும் 'பேயர்' களாகி வருகிறோம் என நாம் ஏன் சிந்திக்கவில்லை. யதார்த்தமாக இருப்பதை - இருக்கிற மாதிரிப் படம் எடுக்கிறபோது, அது இன்னமும் நமது வாழ்வோடு ஒன்றியிருக்கக் காண்பதுடன் அதனூடாக ஒரு அனுபவத்தை, தெளிவைப் பெறமுடிவதும் எவ்வளவு இழப்பாயிருக்கும்? எமது கலைஞர்களாவது அத்தகைய நல்ல படைப்புக்களைத் தருவார்கள் என எதிர்பார்ப்போமா?

*மீண்டும் சந்திப்போம்......*




# மூன்றாம் உலக நாடுகளின் கிராமிய வறுமையின் பண்புகளும் வறுமைத்தணிப்பு முயற்சிகளும்

**பொ**துவாக உலகின் அநேகமான நாடுகள் வறுமையின் பிடியில் சிக்குண்டிருப்பதைக் காணலாம். அதிலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நிலவுகின்ற "வறுமை" என்பது பற்றியும், அது பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் கலந்துரையாடப்பட்டு வருகிறது. உலக சனத்தொகையில் கிட்டத்தட்ட 1/5 பங்கினர் வறுமையினால் பாதிக்கப்படுவோராகவோ அல்லது துன்பப்படுவோராகவோ காணப்படுகின்றனர். வறுமை என்பது பல்வேறு



பரிமாணங்களையும், சிக்கல்களையும் கொண்ட வகையிலேயே வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது. வழமையாக வறுமை என்று குறிப்பிடும்போது அது வாழ்க்கையுடன் போராடுவதற்கு உயர்ந்த அபாய ஏதுக்களையும், குறைந்த இயலளவுமுள்ளதுமான, எதற்கும் சக்தியற்றதும், அதிகாரமற்றதுமான மிகவும் பலவீனமாக உள்ள ஒரு நிலையைக் குறிப்பிடுகிறது. வறுமையின் பரிமாணம் பற்றிக் குறிப்பிடுவோர் பிரதானமாக இரண்டு வகையான பரிமாணங்களைக் குறிப்பிடுகின்றனர்.

அதாவது, தனிநபர் அல்லது ஒரு குடும்பம் எந்தளவுக்குக் குறிப்பிட்ட ஆகக்குறைந்த வாழ்க்கைத்தரத்தைக்கூட மேற்கொள்ள முடியாதுள்ளனர் என்ற அடிப்படையில் நோக்குவதாக அமைந்துள்ளது. இந்த நிலைமையை மதிப்பிடும்போது இலங்கையில் இது "நுகர்வு வறுமை" (**Consumption poverty**) என அழைக்கப்படுகிறது. இன்னொரு பரிமாணமாக நுகர்வை விடுத்துக் கல்வியறிவு குறிப்பிட்ட காலத்துக்கு இறப்பு வீதம், நோய்வாய்ப்படும் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு மனித அபிவிருத்திக் குறி காட்டியாக எடுத்துக்கொண்டு விளக்கப்படுகிறது.

வறுமை தொடர்பான மற்றொரு விளக்கமாக - முழுவறுமை (**Absolute poverty**), சார்பு வறுமை (**Relative poverty**) என்பதும் எடுத்துக்காட்டப்படுகிறது. இதன்படி, முழு வறுமை என்பது ஒரு தனிநபர் அல்லது ஒரு குடும்ப அலகு தமது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற வருமானத்தின் அளவைக் குறிப்பிட்டு, அவ்வருமான மட்டத்தின் கீழ் வாழும் நிலையை இது குறிப்பிடுகிறது. மாறாக, சார்பு வறுமை என்பது, வெவ்வேறு வருமானப் பிரிவினரை உள்ளடக்கி ஒப்பீட்டுரீதியில் நாகரிக வளர்ச்சி, சுற்றாடல், குடும்ப அந்தஸ்து போன்ற அம்சங்களைக்கொண்டு விளக்குவதாகும்.

எனவே, இங்கு அடிப்படைத் தேவைகள் முழுவதும் பூர்த்திசெய்யப்பட்ட ஒரு நிலையைக் குறிப்பிடும். பொதுவாக, கிராமப்புறங்களில் நிலவும் வறுமை (கிராமிய வறுமை) முழுவறுமையாகக் காணப்பட, நகரப்புறங்களில் நிலவும் வறுமை சார்பு வறுமையாகக் காணப்படும். கிராமப்புறங்களில் சனத்தொகை அதிகரிப்பு, சொத்தமைப்பு, அடிப்படைப் பொருளாதார சூழ்நிலைகள், வேலையின்மை போன்றவற்றின் விளைவாக அங்கு முழுவறுமை தோற்றுவிக்கப்பட நகர்ப்புறத்து வறுமையானது இடம்பெயரும் தன்மை, நாகரிக முன்னேற்றம் போன்றவற்றின் விளைவால் தோற்றுவிக்கப்படுகிறது.

பொதுவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கிராமப்புறங்களிலேயே கூடுதலான வறுமையும், அபிவிருத்தியடைந்த நாடுகளில் நகரப்புறங்களில் கூடுதலான வறுமையும் காணப்படுகின்றது. வறுமையானது நீடித்ததாகவோ அன்றி தற்காலிகமானதாகவோ இருக்கலாம். ஆனால், தற்காலிக வறுமை தீவிரமானதாக அல்லது கூர்மையானதாக இருக்குமாயின் தொடர்ந்து வரும் சந்ததிகள் பொறி நிலைக்குள் தள்ளப் பட வேண்டியேற்படும். உலகளாவிய ரீதியில் நிலவுகின்ற வறுமையில் கிட்டத்தட்ட 63% ஆனவர்கள் கிராமிய வறுமைக்குட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இதிலும்- சீனா, பங்களாதேஷ், போன்ற நாடுகளில் 90% ஆனவர்களும் துணை- சகாரா ஆபிரிக்க (**Sub Saharan Africa**) நாடுகளில் 65-90% த்திற் குட்பட்டவர்களும் கிராமிய வறுமைக்குட்பட்டு வாழ்ந்து வருவதை அவதானிக்கலாம். பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் கிராமியப் புறங்களில் வாழும் வறியவர் ஒருவர் எதிர்கொள் கின்ற கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வசதிகள் போன்றவை நகர்ப்புறத்து வறியவர் ஒருவர் எதிர்கொள்ளும் இத்தகைய வசதிகளைவிட மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது. வறுமை, பொருளாதார வளர்ச்சி, வருமான சமமின்மை என்பவற்றுக்கிடையிலான இடைத் தொடர்புகள் அண்மைக் காலமாகப் பொருளாதார அபிவிருத்தியில் பரவலாக ஆராயப்பட்டே வருகிறது. மூன்றாம் உலக நாடுகளது முழு வறுமையானது பொருளாதார வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுவதால், அங்கு நிலவும் முழுவறுமை தணிக்கப்படவேண்டுமாயின் நிலைத்து நிற்கக்கூடியதும், வருமானச் சமமின்மையைக் குறைக்கக் கூடியதுமான வகையில் பொருளாதார வளர்ச்சி இடம்பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவாக, பொருளாதார வளர்ச்சி நிகழ்ந்திராத சூழ்நிலையில் வறுமையைக் குறைக்க இயலாது. நிகழ்கால பொருளாதார வளர்ச்சியினது அனுபவங்களின்படி வறியவர்களது வருமான மட்டத்தை உயர்த்தக் கூடியளவுக்கு அமைப்பு ரீதியான தூண்டுதல்களுடன் இணைந்தவகையில் முதலீட்டுத் திட்டங்களையும் வழங்கவேண்டிய அவசியம் உணரப்படுகின்றது. இவ்வகையில் ஊழியச் செறிவான தொழில்நுட்பமுறைகளை அடிப்படையாக கொண்ட விவசாயத்துறையினது வளர்ச்சி எப்போதும் வறுமையைத் தணிப்பதற்கு உதவி புரிவதாகவே அமையும் எனக்கருதப்பட்டது.

மூன்றாம் உலக நாடுகளில் வாழும் கிராமிய வறியவர்களுக்கும், அதன் பொருளாதாரத்துக்கும் இடையிலான தொடர்பை நோக்குமிடத்து - இந்நாடுகளின் கிராமிய வறுமை பெருமளவில் விவசாயம், மீன்பிடி, காட்டுத்தொழில் மற்றும் சேவைகளுடன் தொடர்புபட்டதாயும், அவற்றில் அதிகளவு தங்கியுள்ளதையும் காணலாம்.

அத்துடன், கிராமிய வறுமைக்குட்பட்ட குழுவினர் ஒரே தன்மை வாய்ந்தவர்களாகவும் இருப்பதில்லை. இக்குழுவினரில் சிறு நிலங்களை உடமையாகக் கொண்டவர்களும், குத்தகை விவசாயிகளும் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களும் அடங்குவர். இதில் சிறுநிலக் குத்தகை விவசாயிகள் விவசாய மற்றும் விவசாயமல்லாத் துறைகளில் தமது கிராமியப் புறங்களுக்கு உள்ளேயும், கிராமியப்புறங்களுக்கு அப்பாலும் தமது உழைப்பை விற்பனை செய்பவர்களாக காணப்படுகின்றனர். தவிர, இக்குழுவினரின் சில அங்கத்தவர்கள் சுழற்சிமுறையிலோ அல்லது நீண்டகால அடிப்படையிலோ நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்பவர்களாகவும் உள்ளனர்.

(அடுத்த வாரம் தொடரும்)

ஏ.தயாபரன், விரிவுரையாளர்,
வவுனியா பல்கலைக்கழகம்.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் புகையிலை உற்பத்தி

சென்ற வாரத் தொடர்ச்சி...

**வ**டமாகாணத்தில் 1960 இல் 216 சுருட்டுக் கொட்டில்கள் இருந்தமை புகையிலைச் செய்கை இம்மண்ணின் கைத்தொழில் பயிராக மதிக்கப்பட்டதற்கு இன்னொரு சான்றாகும்.

### வர்த்தகப்பயிர்

புகையிலையானது பதப்படுத்தப்பட்ட பின்பே உலகச் சந்தையில் விற்பனையாகின்றது. யாழ்ப்பாண மக்கள் புகையிலை பதப்படுத்தலில் (**processing**) ஈடுபடுவதில்லை. அவர்கள், புகையிலைக்குப் பரிகரணம் (**Curing**) மட்டுமே செய்வர்.

உற்பத்திப் பொருட்களான சிகரெட், சுருட்டு, சுங்கான் இலை, மூக்குத்தூள் என்பன உலக வர்த்தகச் சந்தையில் வாய்ப்புள்ள பொருட்களாகக் காணப்படுகின்றன.

உலகம் முழுவதும் 90 நாடுகளில் புகையிலை உற்பத்தியும், 32 நாடுகளில் தனி ஏற்றுமதிப் பயிராக வும் புகையிலை உள்ளது. அமெரிக்கா, இந்தியா, சீனா, ஜப்பான், இத்தாலி, போலந்து, கனடா, இந்தோனேசியா, தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முக்கியமாக இதில் அடங்கும்.

குறிப்பாக - இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின் என்பன புகையிலையை இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும்.

### தொழில் வாய்ப்புப் பயிர்

புகையிலைப் பயிர்ச்செய்கை வருடம் பூராவும் தொழில்வாய்ப்பு வழங்குவதாக அமைவதுடன் - பதப்படுத்தலில் ஈடுபடின் தொழில் வாய்ப்பு அதிகரிக்கவும் இடமுண்டு. இந்தியாவில் 3.5 மில்லியன் மக்கள் புகையிலை தொடர்பான தொழில் புரிகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசிய வருமானப் பயிர்

உள்நாட்டில் வேலைவாய்ப்பை வழங்குவதுடன், வெளிநாட்டு ஏற்றுமதி வருமானமும் புகையிலைச் செய்கையால் இலங்கைக்கு கிடைக்கிறது. மஞ்சள் புகையிலை (**un.manu -factured leaf**), வெள்ளைப் புகையிலை, சிவப்புப் புகையிலை, கறுப்புப் புகையிலை எனப் பலதரங்களில் காணப்படும். உலர்த்தப்பட்ட இலைகள் தரத்திற்குத் தகுந்த வருமானத்தை வழங்குகின்றன. இலங்கையில் புகையிலைப் பயிர்ச்செய்கையில் வருடாந்தம் $5222X10^3$ கி.கி உற்பத்தியும், அதனால் 5,348 ரூபா மில்லியன் வருமானமும் 1998 ஆம் ஆண்டில் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

### பூச்சிநாசினிப் பயிர்

வேப்பம் விதை சிறந்த பூச்சிநாசினி. அது போலப் புகையிலையும் சிறந்த பூச்சிநாசினி. முதிர்ச்சி அடைந்த புகையிலைச்செடியில் இருந்து நிகோட்டின் என்னும் பதார்த்தம் பிரித்தெடுக்கப்பட்டுப் பூச்சிநாசினியாகப் பயன்படுத்துகின்றார்கள். இலைகள் முதிர்ச்சி அடைந்தமையை அறிய, அல்பா அமைனோ நைதரசன் (**Alba amino nitrogen index**) செறிவு குறிகாட்டியாக அமைகிறது. எனவே, புகையிலைய்யை மருந்துப்பயிர் (**Drug plant**) என்பர்.

### தூர்வைப் பயிர்
(Soil enrichment crop)

புகையிலை மரமானது 750 **mm** நீளம் வரை பக்க வேர்களைப் பரப்பி, பல நார் வேர்களைக் கற்றையாகத் தோற்றுவித்து, நில வெடிப்புக்களை ஏற்படுத்திச் சிறந்த மண் தூர்வையைக் கொடுக்கிறது. மேலும் வேர்களின் பகுதிகள் நிலத்தில் விடப்பட்டு, சேதனப் பொருட்கள் சேர்வதால் நிலவளம் பேணப்படுகிறது. எனவே புகையிலை சிறப்பாக வளரும் நிலம், எப்போதுமே சிறந்த தரையாகக் கருத முடியும்.

### ஆய்வுப்பயிர்

உலக ரீதியாகக் கடந்த 15 ஆண்டுகளில் 1935 பிறப்புரிமை ஆய்வுகள் (**GM**) மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 122 ஆய்வுகளைப் (13.04%) புகையிலையில் செய்துள்ளார்கள்



என்பது புகையிலையின் அவசியத்தை விளக்குகின்றது.

பயிர் உற்பத்தி, பராமரிப்பு, பரிகரணம் என்பவற்றில் இப்பயிர் சம்பந்தமாகப் பலதரப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளமுடி யும். குறிப்பாக, அறுவடைக்குப் பின்னாலான பரிகரண ஆய்வுகளுக்குப் புகையிலை இன்றியமையாதது.

### சர்வதேசப்பயிர்
(International Plant)

புகையிலைப் பயிர் மட்டுமே சர்வதேச அந்தஸ்த்தைப் பெற்றுள்ளது. இப்பயிர் 1518இல் சப்புப் பயிர் என இனம் கண்டு கொள்ளப்பட்டதுடன், உண்மையான தரத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே அடைந்துள்ளது என்பது எமது விவசாயிகளுக்குக் கிடைத்த பெருவெற்றி ஆகும். உலகரீதியில் 790 **mm** நீளமான புகையிலை காணப்பட்டபோதும், வடமாகாணத்தில் 1266 **mm** நீளப் புகையிலை (பரப்பு $0.5648m^2$) பெறப்பட்டது. இது எமது மக்களின் திறமையை வெளிக்காட்டுவதாக அமைகிறது.

பணப்பயிர், கைத்தொழில் பயிர், வர்த்தகப்பயிர், தொழில் வாய்ப்புப் பயிர், தேசிய வரு மானப்பயிர், மருத்துவப்பயிர், பூச்சிநாசினிப் பயிர், களை கட்டுப்படுத்தல் பயிர், தூர்வைப் பயிர், ஆய்வுப் பயிர், சர்வதேசப் பயிர் எனப்பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட புகையிலை - எமது மத்தியில் மிகவும் பிரபல்யமானது என்பது வரவேற்கத்தக்கது. புகையிலை உற்பத்தியில் உலக சாதனையை ஏற்படுத்தி இருக்கும் எமது விவசாயிகள், இலைமறைகாயாக இருப்பது மனவேதனைக்குரிய விடயமாகும்.

எமது மக்களை ஊக்குவிப் பதற்கும், மாணவர்களின் ஆய்வுக் கல்விக்கு ஆக்கம் கொடுப் பதற்கும், இதுவரை மறைக்கப்பட்ட ஆய்வுகளை வெளிக்கொண்டு வருவதற்கும், புகையிலைச்செய்கை எமக்கு அவசியம்.

எனவே, இது பற்றிய ஆக்க வேலைகளில் மக்கள் ஈடுபட்டு, நாம் கண்ட தொழில்நுட்பத்தை மறைய விடாது பாதுகாப்புக்கு வேண்டும். ★

தருவது:-
தகவல் தொடர்பு மையம்,
விவசாய பீடம்.



# இறால் வளர்ப்பு

மேலும் இந்த உணவானது நாளாந்தம் 20% ஆல் அதிகரிக்கப்படவும் வேண்டும். ஆனால், பயன்படுத்தி, அல்காக்களின் கல எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், அல்கா உயிருணவு தயாரிக் பெறமாட்டாது. 3 ஆவது நாள் மேலதிகமாக 2 தொன் லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட கடல் நீர் சேர்க்கப்படும். இந்நிலையில், அடுத்த நாட் காலையில் நீர்ப் பரிமாற்றமானது நடைபெறும். பல்லாயிரக்கணக்கான குஞ்சுகளைக் கொண்டிருக்கும் குறித்த கனவளவு நீரில், குஞ்சுகள் வெளியேற்றும் கழிவுகள், குஞ்சுகளின் தோல் கழற்றல் மீதிகள், எஞ்சிய உணவுத் துணிக்கைகள், இறந்த அல்கா, ஆட்டிமியாக்களாலும் குஞ்சு வளர்ப்புத் (உள்ளக, வெளியக) தொட்டிகள் மாசடைகின்றன.

**வெப்பநிலையைப் பேணல்**

உள்ளகக் குஞ்சு வளர்ப்புத் தொட்டியின் வெப்பநிலையானது, தொடர்ச்சியாக அவை வெளியாகக் குஞ்சு வளர்ப்புத் தொட்டிக்கு மாற்றும்வரை மாறாது பேணப்படல் வேண்டும். (84 F) இதற்காக மின்சார வெப்பமாக்கிகள் பயன்படும்.

**நோய்களை இனம் காணலும், சிகிச்சையும்**

தினமும், அனைத்து உள்ளக, வெளியகக் குஞ்சு வளர்ப்புத் தொட்டிகளிலும் இருந்து எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்படும் குஞ்சு "மாதிரிகளை" வெற்றுக்கண், நுணுக காணப்படல்.

3. வால் பகுதி கருகிக் காணப்படல்
4. இறால் குஞ்சுகள் இரவில் ஒளிர்தல் என்பன பொதுவான நோயறிகுறிகளாகும்.

**கழிவுகளை முகாமைப்படுத்தல**

இறால் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் வெளியேற்றப்படும் கழிவுகள் நேரடியாகச் சூழலையடையின், அது சூழலுக்கு ஆபததானதாகும். பெரும்பாலும் நீர்ப் பரிமாற்றத்தின்போது பெருமளவு கழிவுநீர் சூழலுக்கு வீணே விடப்

# அடிப்படை வசதிகளும், கட்டமைப்பும்

வளரும் குஞ்சுகளுக்கான சிறந்த உணவு - **Chateoceros, Tetraselmis** இன அல்காக்களின் கலவையேயாகும். புரட்டோசோபியா, மைசிஸ் நிலையில் இவை தாவர உணவுகளை உண்கின்றன. விலங்குணவுகளாக ஆட்டி மியா (**Artemia**), ரொட்ரிபேர் (**Rotifer**) என்பன விளங்குகின்றன. இவை பருமனில் சற்றுப் பெரியவை என்பதால் இவ்வுணவுகளை, வளரும் குஞ்சுகளின் மைசிஸ், பிந்திய குடம்பி என்பனவே இவற்றை விரும்பி உண்கின்றன.

செயற்கை உணவுகளானது- நுண் துகளாகவும், உறையிடப்பட்ட நுண்திரளைகளாக வெவ்வேறு வர்த்தகப் பெயர்களில் சந்தைகளில் காணப்படுகின்றன.

இவ்வகையான செயற்கை உணவுகள் கொழுப்பு, அமினோ அமிலங்கள் என்பவற்றைக் கொண்டிருப்பதால், இக்கொள்கலன்களைப் பாவனைக்காகத் திறந்ததும், அவற்றைக் குளிர்சாதனப்பெட்டியில் சேமித்தல் அவசியமாகும்.

இவ்வளரும் இறால் குஞ்சுகளுக்கான செயற்கை உணவுகளிலேயே அபிவிருத்தி அடைந்து வருகின்ற இறால் பண்ணைக் கைத்தொழில்கள் எதிர்காலத்தில் தங்கி இருக்கப்போகின்றன.

**உயிருணவு உற்பத்தி**

**அல்காக்கள் உற்பத்தி:-**

அல்காக்கள் உற்பத்தியானது குளிரூட்டப்பட்டதும், செயற்கைப் புளோரொளிர்வு உள்ளதும், தொற்று நீக்கப்பட்டதுமான சூழல் நிலவும் கட்டடத் தொகுதியினுள் நடைபெறுகின்றது.

ஆரம்ப வளர்ப்புக்கு வேண்டிய அல்காவானது, கடலிலிருந்து பிரித்தொடுத்து செறிவாக்கப்பட்டு உருவாக்கப்படும், "தாய் வளர்ப்பூடக" கரைசலிலிருந்து பெறப்படுகின்றது.

இந்த அல்காக்களுடன் பல இரசாயனச் சேர்வைகளையும் கப்படுகின்றது.

**விலங்கு உயிருணவு (ஆட்டிமியா) உற்பத்தி :-**

ஆட்டிமியா விலங்கு உயிருணவானது வளரும் இறால் குஞ்சுகளுக்குத் தேவைப்படும் சகல போசணைக் கூறுகளைக் கொண்டுள்ளதும், இறால் குஞ்சுகளால் இலகுவில் பிடித்து உண்ணக்கூடியதுமான உணவாகும்.

ஆட்டிமியா விலங்கு உயிர் உணவானது - இறக்குமதி செய்யப்படும் ஆட்டிமியா வித்திகளைத் தகுந்த சூழல் நிலைமைகளில் வைப்பதன் மூலம் 24 மணித்தியாலங்களில் இவை பொரித்து ஆட்டிமியாக்களாகும்.

இவற்றை வளரும் குஞ்சுகளுக்கு வழங்கும்போது, இவற்றில் பொரிக்காத வித்திகள் இல்லாது இருத்தல் வேண்டும். அல்லது இவ்வித்திகளின் வெளிப்புறமாகக் காணப்படும் உறையானது இலகுவில் சமிபாடடையாது அவற்றின் உணவுக் கால்வாயை அடைப்பதால் அவை இறக்கும்.

**முகாமைத்துவக் கட்டமைப்பு**

இறால் குஞ்சுற்பத்தி நிலையங்கள் வெற்றிகரமாக இயங்கிச் சிறந்த தரமான, ஆரோக்கியமான இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்வதில் பங்களிக்கின்ற நிர்வாக நடவடிக்கைகள் உள்ளடக்கிய கட்டமைப்பு முகாமைத்துவக் கட்டமைப்பு எனப்படும். இறால் குஞ்சுற்பத்தி நிலையங்களில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் முகாமைத்துவ நடவடிக்கைகளானவன -

1. நீர்ப் பரிமாற்றம்
2. வெப்பநிலைச் சீராக்கம்
3. நோய்களை இனங்காணல்
4. கழிவுகளை முகாமைப்படுத்தல்
5. குஞ்சுகள் அறுவடை

**நீர்ப் பரிமாற்றம்**

ஆரம்பத்தில் இறால் குஞ்சு வளர்ப்புத் தொட்டியானது (கொள்ளளவு 6,000 லீ) இரண்டு தொன் நீரால் நிரப்பப்படும். பின் இரண்டாவது நாள் நீர்ப் பரிமாற்றம் நடை

இதேபோல இலிங்க முதிர்ச்சியுறும் பிரிவிலும், பெற்றோர் இறால்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் எச்சங்கள், அவற்றின் கழிவுகள், பெற்றோர் இறால்களின் தோல் கழற்றல் மீதிகள் என்பவற்றால் மாசடைகின்றன. இதனைத் தவிர்த்து, சிறந்த நீர்ச்சூழலைப் பேணுவதற்காகக் குஞ்சு வளர்ப்பு (உள்ளக, வெளியக) தொட்டிகளிலும், இலிங்க முதிர்ச்சியடையும் தொட்டிகளிலும் நீர்பரிமாற்றம் மேற்கொள்ளப்படும்.

குக்காட்டி என்பவற்றின் ஊடாக அவதானித்து, அவற்றில் அவதானிக்கப்படும் அசாதாரண அறிகுறிகளுக்கமைய நோய்கள் இனங்காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

**பொதுவான அசாதாரண அறிகுறிகள்**

1. அதிகளவில் இறந்த இறால் குஞ்சுகள் தொட்டிகளில் காணப்படும்.
2. இறால் குஞ்சுகளின் உணவுக் கால்வாய் வெறுமையாகக்

படுகின்றது.

எனவே, கழிவுகளைப் பராமரிப்பதுடன், கழிவுநீரை உயிரியல்முறையில் இரு வால்விகள், சிப்பிகள் என்பவற்றைப் பயன்படுத்தி தூயதாக்கி மீண்டும் பயன்படுத்தல்- பொருளாதாரரீதியில் இலாபமுடையதும், சூழலுக்கும் உவப்பானதும் ஆகும். ✻

**மா.ஸ்ரீஸ்கந்தகுமார்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

# தென்னை நாற்று தெரிவும், நடுகையும்

**தென்னை நாற்றுக்களைத் தெரிவு செய்தல்**

★ தென்னை அயன்மகரந்தச் சேர்க்கைக்குரியது என்பதால் உங்கள் வீட்டிலிருந்து பெறும் காய்களை, நாற்றுக்களாகப் பாவிப்பது உகந்ததல்ல.

★ சிபார்சு செய்யப்பட்ட இனங்களின் நாற்றுக்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்று நடுகை செய்வதே உகந்தது.

**நாற்றுக்களின் நடுகை**




நடுகை குழி → 3 அடி நீளம் x 3 அடி அகலம் x 3 அடி ஆழம்

சேதனப்பசளை என்பது,

5 **Kg** மரச்சாம்பல் அல்லது 10 **Kg** காய்ந்த மாட்டுச்சாணம் அல்லது 5 **Kg** ஆட்டுப்பிழுக்கை.

இளந்தென்னைக் கலவை (இ.தெ.க) என்பது,

யூரியா - 2 பகுதி நிறையையும் சபொஸ்பொசுபேற்று - 3 பகுதி நிறையையும் பொட்டாசியம் மியூரியேற்று - 3 பகுதி நிறையையும் சேர்த்து படத்தில் காட்டியவாறு நடுகை செய்யவும்.

**அசேதன உரங்கள் இடுதல்**

நாற்றுக்களைக் குழியில் நட்ட பின்னர், பின்வருமாறு அசேதன உரங்கள் இடுவது உகந்தது.

| | இ.தெ.க (கிராமில்) | தொலமைற்று (கிராமில்) |
|---|---|---|
| 6 மாதங்களின் பின் | 500 | 500 |
| 1 வருடத்தின் பின் | 600 | 500 |
| 1 1/2 வருடத்தின் பின் | 600 | 500 |
| 2 வருடத்தின் பின் | 800 | 500 |
| 2 1/2 வருடத்தின் பின் | 800 | 500 |
| 3 வருடத்தின் பின் | 1000 | 500 |
| 3 1/2 வருடத்தின் பின் | 1000 | 500 |
| 4 வருடத்திலிருந்து காய்க்கும்வரை | 1200 | 500 |

**காய்க்கும் தென்னைகளுக்கு வருடம் ஒருமுறை**

| | முதிர் தெ.க. (கி.கிராமில்) | தொலமைற்று (கி.கிராமில்) |
|---|---|---|
| வருடமொன்றில் 50-75 காய் காய்ப்பவைக்கு | 3 | 1 |
| 75-100 தேய்காய் காய்ப்பவைக்கு | 4 1/2 | 1 1/2 |

**உரங்கள் இடும்முறை**

**இளந்தென்னைகளுக்கு:-**

★ 1 - 1 1/2 வருட வயதுடைய தென்னை எனின், அடியிலிருந்து 1 அடி தூர வட்டப்பகுதியில் மண்ணைக் கொத்திப் புரட்டி முழுமையாகத் தூவி பின் கலக்கவேண்டும்.

★ பின்னர் வருடமொன்றிற்கு ஒரு அடி வீதம் வட்டம் பெருப்பிக்கப்படல் வேண்டும்.

★ பூக்கும் காலத்தில் அடியிலிருந்து 4 1/2 அடி தூரத்தில் வட்டமிட்டுக் கலக்கவேண்டும்.

**முதிர் தென்னைகளுக்கு**

★ அடியிலிருந்து 6 அடி தூர வட்டப் பகுதியில் முழுமையாகத் தூவி மண்ணினுள் புதைக்க வேண்டும்.

★ உரம் போட்ட மேற்பகுதியைப் பிடுங்கப்பட்ட களைகள், காய்ந்த தென்னம் மட்டைகள் அலலது பொச்சுக்களால் மூட வேண்டும்.

**நீர்ப்பாசனமுறை**

இளந்தென்னைகளுக்கு வறண்ட காலத்தில் கிழமைக்கு 2 தடவைகளும், முதிர் தென்னைகளுக்கு கிழமைக்கு 1 தடவையும் நீர் பாய்ச்சுவது உகந்தது.

**தகவல் தொடர்பு மையம்,**
**விவசாயபீடம்**

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | நெல்லியடி | சாவகச்சேரி | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/- | 20/- | 20/- | 30/- | 15/- |
| உருளைக்கிழங்கு | 60/- | 80/- | 65/- | 70/- | 60/- |
| கத்தரிக்காய் | 30/- | 30/- | 35/- | 25/- | 22/- |
| பாகற்காய் | 30/- | 60/- | 30/- | ✻ | ✻ |
| வெண்டைக்காய் | 30/- | ✻ | 20/- | 30/- | 20/- |
| முருங்கக்காய் | 120/- | 200/- | 120/- | 140/- | 120/- |
| கரட் | 60/- | 60/- | 30/- | 50/- | 30/- |
| பீற்றூட் | 40/- | 20/- | 20/- | ✻ | ✻ |
| வெங்காயம் | 35/- | 30/- | 25/- | 35/- | 30/- |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 25/- | 40/- | 25/- |

# தொழில்வங்கி



| | |
|---|---|
| நிறுவனம்:- | மனித உரிமைகள் ஆணைக்குழு |
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | விசாரணை அதிகாரி (யாழ்ப்பாணம்) |
| அடிப்படைத் தகுதி:- | G.C.E. A/L மனித உரிமைகள் விடயங்களில் ஒரு வருட முன் அனுபவம், தொடர்பாடல் திறமை (தமிழ், ஆங்கிலம்), கணினி அறிவு. |
| விண்ணப்ப முடிவு திகதி | 21.04.2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்- "நமது ஈழநாடு" அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

நீங்கான் வெகுளி நிறைஇலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.

- திருக்குறள்.

## நமது நோக்கு

# சுரண்டப்படும் பூமி !

பக்தாத் மீதான அமெரிக்கத் தாக்குதல் - இறுதிக் கட்டத்தை அடைந்து வருவதாகவும் பக்தாத்தின் பல முக்கிய பகுதிகளில் அமெரிக்கத் துருப்புக்கள் ஊடுருவி விட்டதாகவும் தகவல்கள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

முதலில் தீவிரமடைந்து - இடைநடுவே வேகங் குறைந்திருந்த நேசப்படைகளின் தாக்குதல்கள், தற்போது மீண்டும் மூர்க்கமுடன் பக்தாத்தைக் குறிவைத்திருக்கின்றன.

பக்தாத்தை நெருங்க நெருங்க - ஈராக்கியப் படையினரின் எதிர்த்தாக்குதல்களும், தாக்குதல் வழிமுறைகளும், அமெரிக்க - பிரிட்டிஷ் துருப்புக்களை நிலைகுலைய வைக்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் - ஈராக் கியப்படைகள் எதிர்பார்த்தளவு எதிர்த்தாக்குதல்களிலும், இடைமறிப்புக்களிலும் ஈடுபடவில்லையென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனாலும் - ஈராக், பெருமெடுப்பிலான எதிர்த்தாக்குதல்களை மேற்கொள்ளாததன் உண்மையான காரணம் இன்னமும் வெளித்தெரியவரவில்லை என்பதும்- பக்தாத் இன்னமும் நேசநாட்டுப் படைகளின் முழுமையான கட்டுப்பாட்டில் வரவில்லை என்பதும் - போர் இன்னமும் இறங்குமுகத்தில் தணியவில்லை என்பதையே காட்டி நிற்கின்றது.

அமெரிக்கா சொல்லிக் கொள்வதுபோல - பக்தாத்தை அது கைப்பற்றிக்கொண்டாலும், ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனையோ அவரது நெருங்கிய சகாக்களையோ அமெரிக்கத் துருப்புக்களால் இன்னமும் கொல்லவோ அல்லது பிடித்துக்கொள்ளவோ முடியவில்லை.

மாறாக - ஈராக்கியத் தொலைக்காட்சியில் மிக அண்மையிலும் சதாமின் அறைகூவல் வெளிவந்த வண்ணமே இருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நினைத்தது போல 'ஈராக்கைக் கைப்பற்றி, அம்மக்களை சதாமின் பிடியிலிருந்து விடுவித்துவிட்டதாக' மார்தட்டிக்கொள்ளும் சந்தர்ப்பம் இனி ஏற்பட்டாலும் - ஈராக் அமைதியான பூமியாக மாறிவிடாது என்பது உறுதியாகவே இருக்கின்றது.

அமெரிக்கா தனது பொருளியல் ஆதாயத்திற்காக- எரிபொருள் வள ஆக்கிரமிப்புக்காக, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனை 'உலகின் உடனடி ஆபத்துக்குரிய மனிதராக' சித்திரித்து நடத்திய போர் அமெரிக்காவைப் பொறுத்தவரை அதன் நோக்கு நிறைவேறி வருவதான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

பக்தாத்தைத் தவிர - ஈராக்கியப் படைகளின் கட்டுப்பாட்டிலிருந்த பெரும்பான்மையான எண்ணெய் வயல்கள், அமெரிக்கப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன.

பல எண்ணெய் வயல்களை, பின்வாங்கிச் சென்ற ஈராக்கியப்படைகள் எரித்துவிட்டுச் சென்றபோதும் - அமெரிக்கத் துருப்புக்களும் விஞ்ஞானிகளும் அவற்றினை அணைத்து - எரிபொருள் வளத்தை சுரண்டுவதற்கு ஆயத்தமாகிவிட்டனர்.

போதாதென்று - ஈராக்கின் ஒரேயொரு ஆழ்கடல் துறைமுகப் பட்டினமான உம் காசிரை புனரமைத்து, ஈராக்கின் எரிபொருள் வளத்தை வெளியே கொண்டு செல்வதற்கும் பணிகள் தீவிரம்பெற்றுவிட்டன.

இவையெல்லாம் - அமெரிக்கா, நீண்டகாலத்திற்கு ஈராக்கைத் தம்வசம் வைத்திருந்து எரிபொருள் வளத்தைக் கடத்திச்செல்லும் பெரும் திட்டத்தை உலகிற்கு பகிரங்கமாக்கத் தொடங்கிவிட்டன.

தனது நடவடிக்கைகளுக்கு ஒத்திசைவான அரசியல் நிர்வாகப் பீடம் ஒன்றை ஈராக்கில் களமிறக்கவும் நேசநாட்டுப் படைகள் தயாராகிவிட்டதை - ஈராக்கின் தென்பகுதியில் எதிர்க்கட்சிப் படைகள் தரையிறக்கம் செய்யப்பட்டு விட்டது மூலமும், அமெரிக்காவின் மிகவும் நம்பிக்கைக்குரியவுரான அகமட் சலாபி ஈராக்கிற்குள் வந்துவிட்டதன் மூலமும், பஸ்ரா நகருக்கு பிரிட்டிஷ் படைகள் - மேயர் ஒருவரை நியமித்துவிட்டதன் மூலமும் தெளிவாக அறியமுடிகின்றது.

ஈராக்கில் ஒரு பொம்மை அரசாங்கத்தை அமைத்து, நினைத்ததைச் சாதித்துவிடும் திருப்தியில் அமெரிக்கா இருந்தாலும் - சதாம், அமெரிக்கத் துருப்புக்களிடம் சிக்காமல் போயிருப்பதும், ஈராக்கின் அயலிலுள்ள சிரியா, ஈரான் போன்ற நாடுகளின் நிலைப்பாடும், முஸ்லிம் மக்களிடம் ஆழவேரூன்றி இருக்கும் அமெரிக்க எதிர்ப்புணர்வும் ஈராக்கியர்களை நிம்மதியுடன் வாழச் செய்துவிடாது.

அமெரிக்கா தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள - ஈராக் தொடர்ந்தும் பதற்றமுள்ள பகுதியாக - சதாம் தக்கவைத்த போர்ச்சூழலுக்கு மாற்றாகாது - ஆக்கிரமிக்கப்பட்ட, அந்நியப் படையினரின் சுரண்டல் பூமியாக நீடித்திருக்கும் என்பதே யதார்த்தமானதாகும்.

# போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பங்குபெற சுவிற்சர்லாந்து விருப்பம்

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இணைந்து பணியாற்ற சுவிற்சர்லாந்து அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மார்க்கஸ் பெய்னிகர் - பேர்னில் செய்தியாளர்களிடையே பேசியபோதே இவ்விருப்பத்தை வெளியிட்டார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரம்- அதிகரிக்கப்பட்டு, கண்காணிப்புக்குழு வலுப்படுத்தப்பட வேண்டும். நோர்வே, புலிகள், இலங்கை அரசாங்கம் ஆகிய மூன்று தரப்புக்களும் விரும்பினால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் இணைந்து பணியாற்றத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் - இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் விருப்பம் தெரிவித்தால், சுவிற்சர்லாந்தில் சமாதானப் பேச்சுக்களை நடத்த ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரசித்திபெற்ற சிவாலயப் பகுதிகளை புனிதப் பிரதேசமாக்குமாறு கோரிக்கை!

## பிரதமர் ரணிலிடம் மாவை எம்.பி. விடுத்தார்

(கொழும்பு)

சரித்திரப் பிரசித்திபெற்ற, இந்து வணக்கத் தலங்களைக் கொண்ட நான்கு பகுதிகளைப் புனிதப் பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யுமாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா - பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

'ஈஸ்வரம்' எனச் சிறப்பித்து அழைக்கப்படும் திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரம், மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம், சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரம், கீரிமலையிலுள்ள நகுலேஸ்வரம் ஆகிய வணக்கத்தலங்களின் சுற்றாடல்களையே, புனிதப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்துமாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகுலேஸ்வரம் - யாழ்.மாவட்டத்தில் கீரிமலையில் அமைந்துள்ளது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலோடு நகுலேஸ்வரம் சரித்திர சம்பந்தமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. கீரிமலை தீர்த்தமாடுவதற்கும் பிரசித்திபெற்றது. ஆகையால், மாவிட்டபுரம், காங்கேசன்துறை அடங்கலான பகுதியைப் புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா - பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் கலாசார அமைச்சர் கருணாசேன கொடிதுவக்குக்கும், இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# தேசிய இளைஞர் படையணிக்கு யாழில் 15 பேர் தெரிவாகினர்!

## ஏனைய தொகுதிகளிலும் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற தேசிய இளைஞர் படையணியின் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 15 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இது போன்று, ஒரு தொகுதிக்கு 15 இளைஞர்கள் என்ற ரீதியில், யாழ்.மாவட்டத்திலுள்ள 9 தேர்தல் தொகுதிகளிலும் பிரதேசசெயலக ரீதியாகத் தெரிவுகள் நடைபெறும்.

பின்பு - இவர்கள் மூன்றுவாரத் தலைமைத்துவப் பயிற்சிக்காக கொழும்புக்கு இளைஞர் சேவை மன்றத்தினால் அழைத்துச் செல்லப்படுவர்.

க.பொ.த சாதாரணதர தகைமையுடன் பிரதேசரீதியாகத் தெரிவுசெய்யப்படவுள்ள 250 இளைஞர்களை, தலைமைத்துவப் பயிற்சிபெற்றவர்கள் வழிநடாத்துவார்கள். தெரிவுசெய்யப்படவுள்ள 250 பேரும் - ஆங்கிலம், கணினி, தலைமைத்துவம், தற்பாதுகாப்பு பயிற்சி, சமூகப்பயிற்சி, வினைத்திறன் ஆகிய துறைகளில் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

சேவைக்காலத்தில் இவர்களிற்கு 1000 ரூபா பணமாகவும், 1000 ரூபா வங்கிவைப்பு மூலமும் கொடுப்பனவாக வழங்கப்படுமென, தேசிய இளைஞர்சேவை மன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரா)

# வாள்கள், கத்திகளுடன் வரும் இந்திய மீனவர்களால் அச்சம்!

## உள்ளூர் கடற்தொழிலாளரிடையே பீதி

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களை, கடற்படையினர் ஏன் கட்டுப்படுத்த முடியாதென வடமராட்சிப் பகுதி மீனவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

அத்துடன் கடந்த சில வாரங்களாக இந்திய மீனவர்கள்- கத்திகள், வாள்கள், குண்டாந்தடிகளால் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களைக் கரையொதுங்குமாறு எச்சரிப்பதுடன், வள்ளங்களுடனும் மோதுகின்றனர். இதனால் கடற்தொழிலுக்குச் செல்லமுடியாது தாம் அச்சமடைந்துள்ளதாக உள்ளூர் மீனவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மாலை ஏழு மணியளவில் கூட்டம் கூட்டமாக வரும் ஆயிரக்கணக்கான இந்திய ட்ரோலர்கள், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை கடற்படைக்குத் தெரியாதா? அவர்கள் ஏன் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தமுடியாது என மீனவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடல்வலயத் தடைச்சட்டம் அமுலில் இருக்கும் அதே வேளை, கடற்தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் மீது கெடுபிடிகளையும் நேரக்கட்டுப்பாட்டையும் விதித்த கடற்படை தற்போது என்ன செய்கின்றது எனவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## படையினரால் காணாமற்போனோர் விவகாரம்

# யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மாத இறுதிக்குள் வழக்குத்தாக்கல்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் சம்பந்தமான வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு வசதியாகக் கொழும்பிலுள்ள காணாமற்போனோர் குடும்ப அங்கத்தவர்களுக்கான அமைப்பின் சட்டவல்லுநர் குழு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தமது விசாரணைகளை நடத்தியது.

கொழும்பிலிருந்து வருகைதந்த மனித உரிமைகளுக்கான சட்டவல்லுநர் சந்திரபால குமாரதுங்க தலைமையில் மூன்று சட்டவல்லுநர்கள், நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமது விசாரணைகளை நடாத்தினர்.

இந்த விசாரணையில் காணாமற்போனவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். இந்த விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

விசாரணைகளின் இறுதிமுடிவுகளின்படி சாட்சியங்கள் உள்ள முறைப்பாடுகள் - கிரிமினல் குற்றச்சாட்டுக்களாகவும் மற்றைய முறைப்பாடுகள் மேனமுறையீட்டு வழக்குகளாகவும் இம்மாத இறுதிக்குள், யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இந்த வழக்குகளில் ஆஜராகுவதற்கு கொழும்பிலுள்ள பிரபல சட்டத்தரணிகள் முன்வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (லி)

# கட்டாயமாக ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்படும் சீமெந்து ஆலை ஊழியர்கள் வழக்குத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களில் 63 பேரைச் சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்வதற்குச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் எடுத்திருக்கும் தீர்மானத்துக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

63 மனுக்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. 1991 ஆம் ஆண்டு தொடக்கம் தமக்கு அரைச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக காட்டியுள்ள மனுதாரர்கள், 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை அமுலுக்கு வரும்வகையில் தமது சேவையை இடைநிறுத்த நிர்வாகம் தீர்மானித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

நிர்வாகத்தின் தீர்மானத்துக்கு அமைய கட்டாய ஓய்வு வழங்கப்படவுள்ளதாகவும், அவர்கள் நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2001 ஜனவரி மாதம் முதலாம் திகதி வரையிலான காலப் பகுதியைக் கவனத்திற்கொண்டு, ஓய்வுபெற வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்குமாறும் மனுதாரர்கள் நீதிமன்றிடம் கோரியுள்ளனர்.

# பன்னிரண்டாவது ஆண்டைக் கடக்கும்

## சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் ஒரு வரலாற்றுக் குறிப்பு

இந்தச் சமாதானச் சூழல் தொடருமா...? இதுதான் இன்று அனைவரது கேள்வியாக எழுந்து நிற்கின்றது. இதன் பதிலுக்கப்பால், இன்றைய நாட்கள் இனிமையாகவே கழிகின்றன. புதிய புதிய வரவுகள் மக்களின் மனங்களைச் சற்று வருடி விடுகின்றது. போருக்குள் வாழ்ந்த எம்மக்கள் சற்று நிமிர்ந்து நிம்மதிப் பெருமூச்சை விடுகின்றனர். பாதை திறப்பு, பொருளாதாரத் தடைநீக்கம், இரவுபகல் நடமாட்டம், நாடு முழுவதும் சென்றுவருவதற்கான அனுமதி எனப் பல்வேறு சூழல்களும் உருவாகி மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ளது இந்தச் சமாதானம்.

இந்தச் சமாதானத்தைப் பிரசவித்தது யார்....? அல்லது எது....? ஆம். அதுதான் எமது இராணுவச் சமநிலையாகும். கொஞ்சம் கொஞ்சமாக நாம் வாழ்ந்து வந்த நிலத்தை, சொத்தை, உடைமைகளை இழந்

யடிப்புச்சமர் மீளமுடியாத அவமானத்தைக் கொடுத்து, பேச்சுவார்த்தை மேசைக்குத் தள்ளி விட்டதை நாம் மறந்துவிடமுடியாது.

ஆனையிறவை இழந்து ஒரு வருடம் சென்ற பின்னும், அதனைக் கைப்பற்றிய பின்பே புலிகளுடன் பேசுவது என்ற இறுமாப்பில் அரசு தரித்து நின்றது. நோர்வேயின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்த தமிழீழத் தேசியத்தலைவர் - ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தம் அறிவித்ததும் அதனைப் பயன்படுத்திய அரசின் படைகள் குடாநாட்டில் எம் வசமிருந்த பல்வேறு இடங்களையும் கைப்பற்றிப் பெருமிதம் கொண்டதும், பின் ஆறு நாட்களில் ஆனையிறவைப் பிடித்துக் கொடியேற்றுவோம் என்ற கனவுடன் வந்த "தீச்சுவாலை" படையினரை, அவர்கள் உருவாக்கி எரியவிட்ட தீக்குள்ளேயே அவர்களைக் கருகவிட்டு,

கும் சென்று, தாக்குதல் நடத்தி சாதனை படைக்கக் கூடிய தாகும். எனவே, எந்த ஆண்டிலும் வரும் ஏப்ரல் பத்து எமக்குச் சிறப்பான நாளாகவே அமைகிறது. அதில் குறிப்பிட்ட இரண்டு ஆண்டை மட்டும் தருகின்றோம்.

2000 ஆம் ஆண்டு ஏப்ரல் பத்தில் எமது படையணி 9 ஆவது ஆண்டை நிறைவு செய்யும்போது, இத்தாவில் சண்டையில் எதிரியால் மேற்கொள்ளப்பட்ட "வலுச்சக்கர" இராணுவ நடவடிக்கையை முறியடித்தோம்... வெற்றியும் கண்டோம். அதன்பின் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 இல் எமது தேசியத்தலைவர்- உலகப் பத்திரிகையாளர் மாநாட்டை நடாத்தி உலகுக்கு எமது விடுதலைப் போரை உணர்த்தினார்.

இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய ஏப்ரல் பத்தில் எம்மையும் பிரசவித்த எம் தலைவனுக்கு நாம்

எதிரிகள் அஞ்சுமளவுக்கு உங்களுடைய செயற்பாடுகள் இருக்கவேண்டும்." இது படையணியை 1995 ஆம் ஆண்டு திருமலை



நோக்கி வழியனுப்பி வைத்த போது தலைவர் குறிப்பிட்ட வார்த்தைகள்.

தலைவரின் வார்த்தையில் எதிரிகள் கலங்கிப்போனது உண்மை. "தயங்காதே முன்னேறு" என்று

சிறப்பைக் கூறத்தவறவில்லை. அன்றைய தாக்குதல் தளபதியான சாள்ஸ் அன்ரனிக்கு எதிரி எவ்வாறு பயந்தானோ அதேபோல், அவர் நாமம் கொண்ட இப்படையணியும், எதிரிக்கு இன்னும் சிம்மசொப்பனமாகத்தான் உள்ளது.

இந்நிலைமையை உ வாக்கிப் போர் அர கில் எமக்குப் பெருமையும் பல இராணுவ வெற்றிகளையும் பெற்றுத்தந்து

# புலிகளின் முதல் தாக்குதல் படையணி

தது மட்டுமன்றி, இம்மண்ணில் சுதந்திரமாக, கௌரவமாக வாழப்பிறந்த எம்மக்களையும், அந்த மக்களின் உரிமைக்காகப் போரிட்டுக் களத்தில் நாம் இழந்த ஆயிரம் ஆயிரம் மாவீ

சின்னாபின்னமாக்கி இரண்டு நாட்களில் வந்த சுவடு தெரியாமல் ஓட வைத்ததும் நாம் அறிந்த விடயமாகும்.

ஆகவே, இவ்வாறான வெற்றி

நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பிறந்த முதல் மாதத்திலே எமது படையணியின் முதல் சிறப்புத் தளபதியும், எமது படையணியின் தந்தையுமான கேணல் பால்ராஜின்

கோஷமிடும் எதிரிப்படைகள் தயங்கி நின்று செய்வதறியாது திகைத்த களங்கள் எத்தனை.

மேலும் இப்படையணி தொடர்பாக அதன் சிறப்புத் தளபதி கேணல்

இப்படையணியின் வெற்றிக்காக, வளர்ச்சிக்காக 1055 உன்னதமான வேங்கைகளை மாவீரர்களாக இம் மண்ணுக்குக் கொடையாக்கியுள்ளோம்.





ரர்களின் இழப்பிற்குப்பின் உருவானதுதான் எமது இராணுவப்பலம். அல்பிரட் துரையப்பா தொடக்கம் தீச்சுவாலை வரை எமது இராணுவ பலத்தை நிரூபிக்கச் சிங்கள அரசுடன் போரிடவேண்டியிருந்தது.

ஈழப்போரின் வளர்ச்சிப் பரிணாமத்தின் உச்சக்கட்டமாக யாழ்ப்பாண வீழ்ச்சியும், வன்னியின் போர் எழுச்சியும் ஓயாத அலைகளை உருவாக்கிவிட்டது. அலைகளில் அடங்க மறுத்த சிங்களத்திற்கு "தீச்சுவாலை" எதிர்ச்சமர் ஒரு பலமான

களின் அறுவடையால் உருவாக்கம் பெற்ற இராணுவச் சமநிலைதான் இன்றைய எமது அரசியல் வெற்றிக்கு அடிப்படைக் காரணம். இப்படியான வெற்றிகளைக் குவித்துக் கொண்டு இலட்சியம் நோக்கிப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் படையணிகளுள் முதன்மையானதுதான் லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.

1991 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பத்தாம் நாள் எழுதுமட்டுவாள் மண்ணில் அது அரங்கேறியது.



அடியைக் கொடுத்தது. ஆனையிறவை மீண்டும் கைப்பற்றிச் சிங்கள இராணுவத்திற்கு மனோபலத்தை அதிகரிக்கச் செய்ய எண்ணிய சந்திரிகா அரசுக்குத் "தீச்சுவாலை" முறி

தலைவர் பிரபாகரனால் முதல் மரபுவழித் தாக்குதல் படையணி உருவாக்கம் பெற்றது. சுமார் 1500 பேரைக்கொண்ட இப்படையணியானது - தமிழீழத்தின் எந்தப் பகுதிக்

வழிநடத்தலில் "வன்னி விக்ரம" இராணுவ நடவடிக்கையை எதிர்கொண்டு, வெற்றி வாகைசூடி, தலைவரின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்திய இப்படையணி- தனது பத்தாவது ஆண்டில் தீச்சுவாலையை எதிர்கொண்டு வெற்றி பெற்றுத் தலைவரிடம் பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

தமிழீழ மண்ணிலே முதல் வீரச்சாவடைந்த பெருமைக்கும், புலிகளின் மரபைக் காத்துக் களத்திலே வித்தியாசமான முறையில் வீரச்சாவடைந்த பெருமைக்கும், விடுதலைப் புலிகளின் முதற்தாக்குதல் தளபதி என்ற பெருமைக்கும் இலக்கணமாய் இருந்தது மட்டுமன்றி, இத்தனைக்கும் மேலாக தலைவரின் இதயச்சந்திரனாக அவரது இதயத்தில் நீங்காத இடம்பிடித்து வீரத்திற்கும், ஈகத்திற்கும், இயக்க விசுவாசத்திற்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்த திருமலை மண் ஈன்ற நாயகன் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்ற மாபெரும் வீரனின் நாமத்தைக் கொண்ட இப்படையணி விடுதலைப் புலிகளின் முதல் மரபுவழித் தாக்குதல் படையணியாகும்.

"இங்கே நாங்கள் செய்த சண்டை மூலம் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை எதிரிக்கு நன்கு தெரியும்."

"சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியென்றால் எதிரிகள் நடுங்குவார்கள்."

"இனி சாள்ஸ் அன்ரனி பிறந்த மண்ணிலும் நீங்கள் சண்டை பிடிக்கப் போகின்றீர்கள்."

"சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி அங்கே வந்திருக்கின்றது என

பால்ராஜ் கூறுகையில் - "தலைவரின் நம்பிக்கையினைக் கருத்திற்கொண்டு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை ஒரு சாதனை அணியாக, படையணியின் பெயரைக் கேட்டாலே எதிரி அஞ்சுமளவிற்குப் படையணியை உருவாக்க வேண்டும் என்று எனக்குள் ஓர் இலட்சியத்தை ஏற்படுத்தியிருந்தேன்" எனக் கூறினார்.

"போராட்டத்தின் நெருக்கடியான

இன்றைய சமாதானச் சூழ நீடித்து எம்மக்களுக்கு ஒரு நிம்மதியான, சுதந்திரமான, கௌரவமான வாழ்வு கிட்டவேண்டும். தமிழன்

**A.காண்டீபன்.**

உரிமையுள்ள மனிதனாக வாழ வேண்டும். அந்த உரிமையைச் சிங்களம் தரமறுத்தால், மீண்டும் இராணுவ மேலாதிக்கம் எம்மண்ணில்



களச்சூழல்களை வெற்றி கொள்வதற்காகத்தான் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி உருவாக்கப்பட்டது." எனக் கூறுகின்றார் அதன் முன்னாள் சிறப்புத் தளபதி கேணல் தீபன்.

இவ்வாறாக இந்தப் படையணியை வைத்துச் சண்டை செய்த எந்தக் கட்டளைத் தளபதியும் அதன்

சதிராட்டம் போட்டால், விடுதலைப் புலிகள் இதற்கெதிராகப் போராடுவர். அங்கே சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் களமாடும். தலைவனின் ஆணை நிறைவேறும். உலக சரித்திரம் புதிய வரலாறு ஒன்றைப் பதிவாக்கும். அதிலும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி கைதட்டும். "**இயலாத ஒன்று இருக்காது எமக்கு.**"

ஈராக்-போர்க்களம்



பக்தாத்தின் வீதி வீதியாக தேடுதல்களை முடுக்கிவிட்டுள்ளது அமெரிக்கப்படை.



சிதைக்கப்பட்ட சதாமின் உருவப்படமருகே அமெரிக்கப் படைவீரன் ஒருவர்.



போர் ஓய்ந்த ஒரு நேரத்தில் வீதியில் ஒரு உலா.



சதாமின் உருவச்சிலைக்கு, அமெரிக்கத் தேசியக் கொடியால் மூடி மறைப்பு முயற்சி.



தரையில் சதாம் வீழ்ந்தாரா? இல்லை எழுவாரா?.

# பக்தாத்தில் நேற்று அமைதி; பெரிய மோதல்கள் ஏதுமில்லை

பக்தாத் நகரினுள் அமெரிக்கப் படைகள் நுழைந்ததைத் தொடர்ந்து நேற்றுமுழுவதும் அங்கு அமைதி நிலை காணப்பட்டது. ஆங்காங்கே ஓரிரு துப்பாக்கி வேட்டுக்களைத் தவிர வேறு எந்தப் பெரிய மோதல்களோ, வேட்டொலிகளோ கேட்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பக்தாத் நகருள் மூன்று முனைகளில் நுழைந்த அமெரிக்க கவசப் படைகள், தொடர்ந்து அங்கு தரித்துள்ளன. இப்படையினரை மேலும் பலப்படுத்தும் முகமாக மேலதிகப் படைகள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பக்தாத் நகருக்கு மேலாக எவ்வித எதிர்ப்புமின்றி தமது படை விமானங்கள் பறந்துதிரிவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். இதேசமயம், அமெரிக்க எப்-15 ஈகிள் போர் விமானம் ஒன்று பக்தாத் அருகே காணாமற்போயுள்ளதாகவும் அதன் இரு விமா



பக்தாத்தில் அமெரிக்க டாங்கி



சிதைந்த ஜனாதிபதி மாளிகை

னிகளையும் காணவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பக்தாத்தில் கட்டடம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட பாரிய குண்டு வீச்சில் சிக்கி, சதாமும் அவரது இரு புதல்வர்களும் மரணித்திருக்கலாம் என பெயர் குறிப்பிட விரும்பாத, அமெரிக்க புலனாய்வுத்துறையான சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பக்தாத் நகரைப் பாதுகாக்கும் ஈராக்கிய இராணுவத்தின் குடியரசுக் காவல் படையினர் எங்கு போயவிட்டனர் என்பது தமக்கு வியப்பாக இருப்பதாக மேற்கத்தைய செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேசமயம், அமெரிக்கப் படைகள் சரணடையாவிட்டால் அவர்கள் தமது டாங்கிகளுடன் எரியவேண்டியிருக்கும் என ஈராக் தகவற்துறை அமைச்சர் சயீட் அல்-சஹாப் எச்சரித்துள்ளார். ஈராக் அரசு சரணடையும் என்ற பேச்சுக்கு இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சதாமின் இருப்புக் குறித்து அமெரிக்க அதிகாரிகள் குழப்பம்

(பக்தாத்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனும் அவரது இரு புதல்வர்களும் இன்னும் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பது அமெரிக்க வட்டாரங்களில் பெரும் கேள்வியாக உருவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் அல்-மன்சூர் பகுதியில் உள்ள ஓர் கட்டடம் மீது பாரிய குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தி, சதாமைக் கொன்று விட்டதாக உறுதியாக நம்பிய அமெரிக்கப் படைகள், தற்போது சதாம் அத் தாக்குதலில் இருந்து தப்பி விட்டதாகக் கருதுகின்றன. அக்கட்டடத்தினுள் சதாம் இருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத்தகவலைத் தொடர்ந்து, 45 நிமிடங்களில் அங்கு பாரிய குண்டுகள் வீசப்பட்டன என பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், தாக்குதல் நடப்பதற்கு சில நிமிட நேரத்துக்கு முன்பாகவே சதாம் அங்கிருந்து வெளியேறி விட்டதாக தற்போது கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன என சி.ஐ.ஏ. கூறுகிறது.



குண்டு வீச்சினால் அழிந்த கட்டடம்

# பஸ்ராவில் பழங்குடி மேயர்; நியமிக்க பிரிட்டன் முயற்சி!

## கெமிகல் அலியின் பதுங்குகுழிகளிலும் தேடுதல் வேட்டை

தாம் கைப்பற்றிய ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவின் மேயராக, பழங்குடியினத்தவர் ஒருவரை நியமிக்க பிரிட்டிஷ் படைகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

பஸ்ராவில் குடிநீர் வசதி மற்றும் உணவு விநியோகம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு ஒரு சிவில் ஆட்சி முறை உடனடியாக அமைக்கப்படவேண்டும் என மூத்த பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை- பிரிட்டிஷ் படைகள், நீர் தேங்கிநிற்கும் நிலத்தடியில் பதுங்குகுழியினுள் மூழ்கி அங்கு இரசாயன ஆயுதங்கள் ஏதும் இருக்கின்றனவா என ஆராய்ந்து வருகின்றன. இந்த நிலத்தடி பதுங்குகுழிகள், கெமிகல் அலி எனப்படும் சதாமின் நெருங்கிய சகாவும் தெற்குப் பகுதித் தளபதியுமான அலி ஹசன் அல் மஜீத்தின் அலுவலகத்தின் கீழ் அமைந்துள்ளன. இவ்வலுவலகம் பிரிட்டிஷ் விமானப் படையால் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது கெமிகல் அலி குண்டுவீச்சில் இறந்தாரா என்பதை அறிய, பிரிட்டிஷ் தடயவியல் ஆய்வாளர்கள் அப்பகுதியில் சோதனைகளை மேற்கொள்கின்றனர். அதேவேளை, பிரிட்டிஷ் அணு மற்றும் இரசாயனவியல் ஆய்வாளர்கள், நிலத்தடிப் பதுங்குகுழிகளை ஆராய்ந்து ஆபத்தான ஆயுதங்கள் ஏதும் மறைத்துவைக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.



கெமிகல் அலி

உலகவலம்

# ஈராக்கை நிர்வகிப்பதற்கு அமெ. அதிகாரிகள் குழு

## பொம்மை அரசை உருவாக்கும் முயற்சி

போருக்குப் பிந்திய ஈராக்கை நிர்வகிக்க, அமெரிக்காவினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவொன்று ஈராக்கின் தென்துறைமுக நகரான உம் கசாருக்கு வந்துசேர்ந்துள்ளது.



ஜெனரல் பக் வோல்ரர்ஸ்

முன்னாள் அமெரிக்க ஜெனரலான பக் வோல்ரர்ஸ் தலைமையிலான இக்குழுவினர்- வடக்கு, மத்திய, தென் ஈராக்கை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். பாடசாலைகள், வேலை வாய்ப்பு, நீர்விநியோகம், சுகாதாரம் போன்ற விடயங்களை இவர்கள் கையாளவுள்ளனர்.

புதிய ஈராக் அரசின் அமைச்சுகளுக்கு ஆலோசகர்களையும் இக்குழுவினரே தெரிவு செய்யவுள்ளனர். சதாம் ஹுசைன் தோற்கடிக்கப்பட்ட பின்னர், புதிய ஈராக் ஆட்சி ஆறு மாதங்களுக்குள் அமைக்கப்படும் என அமெரிக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் போல் வூல்ப்விற்ஸ் தெரிவித்தார்.

ஈராக்கின் புதிய தலைவராக, தமது அதிகாரத்துக்குட்பட்ட ஈராக்கின் எதிர்க்கட்சித் தலைவர் அகமட் சலாபியை நியமிக்க, அமெரிக்க அதிகார பீடம் திட்டமிட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
(சி.783)
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

# கல்லுண்டாயில் படை...

ஆவது படைத்தளத்திற்கும் விஜயம் செய்தனர். பின்னர் கல்லுண்டாய் வெளி, காக்கைதீவு, சீநோர் ஐஸ் தொழிற்சாலை என்பவற்றையும் பார்வையிட்டனர். இவர்களுடன் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களும் சென்றிருந்தனர்.

கல்லுண்டாய் வெளியில்- தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் யாழ்.படைத்தளபதி சரத் பொன்சேகாவுக்குமிடையில் நீண்ட நேரம் வாக்குவாதம் இடம்பெற்றது. இதன்போது - யாழ். குடாநாட்டு படைத்தளபதி, இப்பகுதியில் மனிதநடமாட்டமே இல்லை, இப்பகுதி வெள்ளம் சூழும் பிரதேசம், இவ்வாறு இருக்கும்போது நாம் எப்படி இங்கிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியும் என்று கேட்டார். மக்கள் குடியிருப்புகளுக்கு அருகிலேயே படை முகாம்கள் அமைய வேண்டும் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் - புரிந்துணர்வு ஒப்பந்தப்படி மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கின்ற வகையில், எந்தவொரு இடத்திலேயும் இராணுவமுகாம் அமைய முடியாது. அத்தோடு, கல்லுண்டாய் வெளியில் நீங்கள் முகாமை அமையுங்கள், அதுவும் மக்களின் விருப்பத்துடனேயே அது செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இதன் பின்னர், யாழ். அரச அதிபர் அலுவலகத்தில் சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற சந்திப்பிலும் எதுவித முடிவும் எட்டப்படவில்லை. இச்சந்திப்பில் இராணுவ பிரதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கரலியத்த, யாழ். குடாநாட்டு இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், எம்.கே. சிவாஜிலிங்கம், அப்பாத்துரை விநாயகமூர்த்தி. கஜேந்திரகுமார். துரைரட்ணசிங்கம், மாவை சேனாதிராஜா, ரவிராஜ் ஆகியோருடன், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் கலந்துகொண்டார்.

இக்கூட்டம் நிறைவடைந்ததும் கருத்து வெளியிட்ட இரா. சம்பந்தன்-

யாழ். குடாப் படைத்தளபதி கூறுவதுபோல், மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் அல்லது மாநகரசபைக் காணிகளில் புதிய படைத்தளம் அமைப்பதைக் கூட்டமைப்பு எக்கட்டத்திலும் அனுமதிக்காது. மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காத ஒரு இடத்தை அவர்களே தேடிக் கொள்ளட்டும். அவர்கள் நினைத்த இடம் எல்லாம் முகாம் அமைக்க முடியாது. அதேவேளை, மாநகரசபைக்குச் சொந்தமான காணி எமக்குத் தேவையான ஒன்று. அதனை எந்தத் தேவைக்கும் பயன்படுத்த நாம் அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்தார். (சு.ரா,9)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 21 . 10 . 1919
இறப்பு 11 . 03 . 2003

திருமதி கனகசபாபதி நாகரட்ணம்

எமது அன்புத் தாயார் திருமதி கனகசபாபதி நாகரட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதுடன், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*71/17, சேர்.பொன்.இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(சி-785)

# பயங்கரவாதிகள் என்றவர்களுக்கு நாம் யார் என்பதை உணர்த்துவோம்

## திருமலையில் கௌசல்யன் உரை

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாகச் சீரழிக்கப்பட்ட பொருளாதாரம், கல்வி, கலைகள் என்பவற்றை மறுசீரமைக்க நாம் போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தினை நாம் விரும்புபவர்கள் அல்ல. அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றே விரும்புகிறோம் - இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

"மானுடத்தின் தமிழ்க்கூடல்- 2", இசை, நடன, நாடக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு கௌசல்யன் கருத்துரை வழங்கினார். வடக்கு- கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ஸ்ரீதேவி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கௌசல்யன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்- எம்மையும், எமது இனத்தையும் பயங்கரவாதிகள் எனச் சித்திரித்த பேரினவாதிகளுக்கு நாம் யார் என்பது உணர்த்தப்படவேண்டும்.

எமது சிந்தனையைத் தெட்டத் தெளிவாக நாம் சொல்லி வருகின்றோம். ஊடகங்கள், மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்ற தாக்கம் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்றார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸும் அங்கு உரையாற்றினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (லி)



மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வில் ஓர் அரங்க நிகழ்வு.

## நினைவுக்கல் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

முல்லைக்கடற்பரப்பில் நீச்சல் பயிற்சியின்போது சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி மேஜர் சாருமதியின்(உமாதேவி செல்வநாயகம் - தனங்களப்பு, சாவகச்சேரி) நினைவுக்கல், நேற்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக இம்மாவீரரின் வீரவணக்க நிகழ்வு நேற்று மாலை 3.30 மணியளவில் கொடிகாமம் நாவலடி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

# கடலிலும் கட்டுப்பாட்டு...

மைச் சந்தித்துள்ளார். இச்சந்திப்பில்- எமது கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோர் கலந்துகொண்டது முக்கிய அம்சமாகும்.

இச்சந்திப்பின்போது - அண்மைக்காலமாக கடலில் ஏற்பட்டு வரும் யுத்தநிறுத்த மீறல்கள் குறித்தும், சில மோசமான நடவடிக்கைகள் குறித்தும், முக்கியமாக- எதிர்காலத்தில் இப்படியான நடவடிக்கைகள் ஏற்படாதவாறு ஒரு புதிய ஒழுங்கமைப்பைக் கொண்டுவருவது சம்பந்தமான விடயங்கள் தான் அதிகமாகக் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக- தரையைப் போன்று கடலிலும் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருப்பதை நாம் அவர்களிடம் சுட்டிக்காட்டினோம். யுத்த நிறுத்தத்திற்கு முன்பு எமது கட்டுப்பாட்டுக் கடற்பிரதேசங்களில் சிறிலங்கா கடற்படை, போக்குவரத்துக்களையோ அல்லது எந்த விதமான அத்துமீறல் நடவடிக்கைகளையோ தவிர்த்தே வந்தது. அவர்கள் வரமுடியாத சூழ்நிலை இருந்து வந்தது.

தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு, எங்களுடைய கடலாதிக்கப் பிரதேசங்களில் சிறிலங்கா கடற்படையினர் ஊடுருவி, பல அத்துமீறல்களைச் செய்கின்ற விடயங்களை எமது கடற்படைத் தளபதி சுட்டிக் காட்டினார்.

சிறிலங்கா கடற்படை 'வருணகிரண' என்ற ரோந்து நடவடிக்கையை, வட-கிழக்குப் பகுதிகளில் மேற்கொண்டு வருவது போர்நிறுத்த மீறல் என்றே நாம் கருதுகிறோம். ஏனெனில், எமது கடலாதிக்கப் பிரதேசங்களுக்குள் கடற்படை இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது, முழுக்க முழுக்க யுத்த நிறுத்த மீறலாகவே இருந்து வருகிறது. பொதுவாகக் கண்காணிப்புக் குழுவிடம் நாங்கள் சில நடைமுறை ஒழுங்குகளை, எமது தரப்பில் ஆலோசனைகளாக முன்வைத்திருக்கிறோம். அதற்குள் மேற்படி விடயமும் உள்ளடக்கப்படும். அதாவது, எமது கடலாதிக்கப் பிரதேசங்களுக்குள் கடற்படை ஊடுருவி, ஆத்திரமூட்டும் செயல்களில், யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதை கண்காணிப்புக்குழு ஊடாக வலியுறுத்தியிருக்கிறோம் எனவும் தெரிவித்த அவர் மேலும் கூறும்போது-

புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையில் கடல் நடவடிக்கைகள், கடல்சார்ந்த செயற்பாடுகள் தொடர்பாக விரிவான விளக்கங்கள் இல்லை. தற்போது அதை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் அண்மைக் காலங்களில் நடைபெற்ற சம்பவங்களால் ஏற்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில்தான் எமது ஆலோசனைகளுடன் கண்காணிப்புக்குழு திரும்பிச்செல்கிறது. விரைவில் இருதரப்பு இணக்கப் பாட்டுடனும் ஒரு நடைமுறை ஒழுங்குகளை அவர்கள் மேற்கொள்வார்கள் என நம்புகிறோம்.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர், திருகோணமலையில் எமது போராளிகள் இலகுவாகப் பாதைகளைப் பயன்படுத்தக் கூடியதாக இருந்து வந்தது. ஆனால், தற்போது இராணுவம் அதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இதற்கு விரைவில் தீர்வுகாணவேண்டியது மிக அவசியமானதும், அவசரமானதும் ஆகும்.

திருகோணமலையில் - எமது போராளிகள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வதற்குப் போக்குவரத்துக்கான ஓர் பாதை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியதற்கான அவசியமுள்ளது.

திருகோணமலையில், நேற்று முன்தினம் எமது மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் பதுமன், இது சம்பந்தமாக கண்காணிப்புக்குழுத் தலைவருடன் கலந்துரையாடியுள்ளார். இதன்போது, அதுசம்பந்தமாக அடுத்த வாரமளவில் மீண்டும் சந்தித்து ஓர் உடன்பாட்டுக்கு வருவதாக கண்காணிப்புக்குழுத் தலைவர் உறுதியளித்துள்ளார் எனவும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (லி)

### கடற்போக்கு....

ளைச் சந்தித்துப் பேசத் தீர்மானித்தோம்.

கிழக்கில் சம்பூரிலும், வன்னியிலும் மேலும் எமது அலுவலகங்களை திறக்க இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளோம்.

புலிகளின் கடற்பயன்பாடு குறித்து படைத்தரப்பின் இணக்கத்துடன், புதிய பிரேரணைகளை யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்வது குறித்தும் நாம் நேற்று பேசினோம் எனக் குறிப்பிட்ட ரெலவ்சன், அப்புதிய பிரேரணைகள் எவை என்பதைச் செய்தியாளருக்குக் கூற மறுத்துவிட்டார்.

### கடற்பிரதேச....

நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மதிய போசனம் வழங்கப்பட்டது.

நண்பகல் 2.30 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் இவர்கள் கொழும்புக்குத் திரும்பினார்கள்.(லி)

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
ராசி சில்க்ஸ் நல்லி சில்க்ஸின் இணைந்த சேவை
உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல வகையான சாறிகள், பஞ்சாபி அன் சோளிகள், சிறுவர்கள், இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும் இன்றே வாருங்கள்
இத்தள்ளுபடி 07-14 வரையுமே
ராசி சில்க்ஸ்
70,71 A, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். 021 - 2225571
நல்லி சில்க்ஸ்
121/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 - 2225573
(சி-782)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.